# ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
# கொள்கை விளக்கக் குறிப்பு
# 2015-2016

**முன்னுரை:**

தமிழ்நாட்டில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் வளர்ச்சிக்கான ஒட்டுமொத்த கொள்கைகளை உருவாக்குதல், நலத் திட்டங்களைத் திட்டமிடுதல் மற்றும் ஒருங்கிணைத்தல் ஆகியவையே ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் முதன்மையான பணிகளாகும். மக்கள் தொகை 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகையான 721.47 இலட்சத்தில், ஆதி திராவிடர்கள் 144.38 இலட்சமும் (20.01%), பழங்குடியினர்கள் 7.95 இலட்சமும் (1.10%) உள்ளனர். பொதுப் பிரிவினருக்கு இணையாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் துரிதமான மற்றும் நீடித்த வளர்ச்சிக்கான சிறந்த மற்றும் பாராட்டுதலுக்குரிய அரசின் கொள்கைகளை நிறைவேற்றுவது இத்துறையின் நோக்கமாகும்.

முன்னேறிய பிற பிரிவினருக்கு இணையாக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் சமூக–பொருளாதார, கல்வி மற்றும் மனிதவள வளர்ச்சி பெறுவதையும், அவர்களது



பாதுகாப்பு, சமூக அந்தஸ்து மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்னும் குறிக்கோளை அடைவதையும் உறுதி செய்யும் நோக்கில் 2015-2016 ஆம் ஆண்டு வரவு–செலவு மதிப்பீட்டில் இத்துறைக்கு ரூ.2106.29 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## I. ஆதி திராவிடர் நலம்

### ஆதி திராவிடர் துணைத் திட்டம்

ஆதி திராவிடர் துணைத் திட்டம் தமிழ்நாட்டில் 1980-81 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆதி திராவிடர் மக்களின் சமூக–பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சிக்கு உதவும் வகையில், இம்மாநிலத்தின் ஆதி திராவிடர் மக்கள் தொகையின் விகிதாச்சாரத்திற்கு இணையாக மாநில ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும்.

மாநில அளவில் ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின்கீழ் திட்டங்களை வகுக்கவும், செயல்படுத்தவும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை ஒருங்கிணைப்புத் துறையாக (Nodal Department) நியமிக்கப்பட்டுள்ளதுடன் இத்துறையின் அரசு செயலாளர்

ஒருங்கிணைப்பு அலுவலராக (Nodal Officer) நியமிக்கப்பட்டுள்ளார். மேலும், மாவட்டங்களில் இத்திட்டங்களைக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் ஆதி திராவிடர் நல இயக்குநர் கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆதி திராவிடர்களுக்கான திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காக செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அலுவலர்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர். 32 துறைத் தலைவர்களை உள்ளடக்கிய 18 செயலாக்கத் துறைகள் வாயிலாக ஆதி திராவிடர் மக்களின் வளர்ச்சி மற்றும் நலனுக்காக ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின் கீழ் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

2015-2016 ஆம் நிதியாண்டில், மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ.55,100 கோடியில், ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்காக 20.46%, அதாவது ரூ.11,274 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது மாநிலத்தில் உள்ள ஆதி திராவிடர் இன மக்கள் தொகை விகிதாச்சாரத்தை விட அதிகமானதாகும்.



## கல்வி

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு 2011 - இன்படி தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் / பழங்குடியின மக்களின் கல்வியறிவு விழுக்காடு பின்வருமாறு:-

(விழுக்காடு)

| வகை | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| பொது | 86.77 | 73.44 | 80.09 |
| ஆதி திராவிடர் | 80.94 | 65.64 | 73.26 |
| பழங்குடியினர் | 61.81 | 46.80 | 54.34 |

மேற்காணும் விவரப்படி ஆதி திராவிடர் **26.74** விழுக்காடும், பழங்குடியினர் 45.66 விழுக்காடும் எழுதப்படிக்கத் தெரியாதவர்களாக உள்ளனர்.

இத்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகள் மற்றும் மாணாக்கர்களின் எண்ணிக்கை

| வ. எண். | வகைப்பாடு | எண்ணிக்கை | மாணாக்கர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | அரசு ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் | 1,125 | 1,23,147 |
| 2 | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் | 306 | 30,933 |
| | **மொத்தம்** | **1,431** | **1,54,080** |

இத்துறைக்கான 2015-2016 வரவு–செலவு மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.2106.29 கோடியில் ரூ.1778.34 கோடி (84.42%) கல்வி மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 1. கல்வி உதவித் தொகைத் திட்டங்கள்

### (அ) பத்தாம் வகுப்பிற்கு மேற்பட்ட கல்விக்கான (Post Matric) உதவித் தொகைத் திட்டம்.

மைய அரசின் கல்வி உதவித் தொகைத் திட்டத்தின் கீழ் 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பினைத் தொடரும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருப்பின், மைய அரசின் கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. மேலும், விடுதியில் தங்காது கல்வி பயில்பவராக இருப்பின் மாதம் ஒன்றிற்கு ரூ.230/- முதல் ரூ.550/- வரையிலும், விடுதியில் தங்கி கல்வி பயில்பவராக இருப்பின் மாதம் ஒன்றிற்கு ரூ.380/- முதல் ரூ.1,200/- வரையிலும், அவர்களது கல்வி நிலைக்கேற்ப பராமரிப்புப் படியாக வழங்கப்படுகிறது. இத்துடன் அரசு /அரசு உதவிப் பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணாக்கர்கள் கல்வி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய கட்டாய மற்றும்



திருப்பி செலுத்தப்படாத கட்டணங்கள், கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகின்றன.

சுயநிதி கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதி திராவிடர் / பழங்குடியின மாணாக்கர்களும் இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை பெற தகுதியுடையவர்கள் ஆவர். மேலும், அவர்கள் சுயநிதி கல்வி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய கல்லூரிகளுக்கான கல்வி கட்டணம் மற்றும் நிறுவன கட்டணம் விலக்களிக்கப்படுவதுடன், அக்கட்டணங்கள் ஆதி திராவிடர் நலத்துறையால் நேரடியாக ஈடு செய்யப்படுகிறது. மேலும், மாணாக்கர்கள் பயிலும் படிப்பிற்கு ஏற்றவாறு அவர்களுக்குப் பராமரிப்புப் படியும் வழங்கப்படுகிறது.

தொழிற்பயிற்சி நிறுவனங்களில் பயிலும் மாணாக்கர்களுக்கும், அவர்களுடைய கல்வித் தகுதி எதுவாக இருப்பினும், இத்திட்டத்தின் கீழ் உதவித் தொகை வழங்கப்படுகிறது.

மைய அரசின் மேற்படிப்பிற்கான (Post Matric) கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் 2015-2016 ஆம் நிதியாண்டில் ஆதி திராவிடர் மாணாக்கர்களுக்கென ரூ.62,330 இலட்சமும், பழங்குடியினர் மாணாக்கர்களுக்கென ரூ.1023.08 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட உதவித் தொகை விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | உதவித் தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|
| 1 | 2011-12 | 745013 | 36069.31 |
| 2 | 2012-13 | 666882 | 37776.93 |
| 3 | 2013-14 | 681855 | 89757.73 |
| 4 | 2014-15 | 805450 | 54821.48 |
| | **மொத்தம்** | **2899200** | **218425.45** |

## (ஆ) மாநில அரசின் சிறப்பு உதவித் தொகைத் திட்டம் (10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பு – Post Matric)

மைய அரசின் கல்வி உதவித் தொகை பெற இயலாத, 10 ஆம் வகுப்பிற்கு மேல் கல்வியைத் (Post Matric) தொடரும் மதம் மாறிய கிறித்துவ மாணாக்கரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு மேற்படாமல் இருப்பவர்களுக்கு சிறப்பு உதவித் தொகைத் திட்டத்தினை மாநில அரசு செயல்படுத்துகிறது. இத்திட்டத்தின் கீழ், மாணாக்கர்கள் விடுதியில் தங்காது கல்விப் பயில்பவராக இருப்பின் மாதம் ரூ.100/- முதல் ரூ.175/- வரையிலும், விடுதியில் தங்கி கல்விப் பயில்பவராக இருப்பின் மாதம் ரூ.175/- முதல் ரூ.350/- வரையிலும், படிப்பிற்கு ஏற்றவாறு பராமரிப்புப் படி வழங்கப்படுகிறது.



அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் மாணாக்கர்கள் கல்வி நிறுவனங்களுக்குச் செலுத்த வேண்டிய கட்டாய மற்றும் திருப்பிச் செலுத்தப்படாத கட்டணங்கள், பராமரிப்புப் படியுடன் கல்வி உதவித் தொகையாக வழங்கப்படுகிறது.

சுயநிதி கல்வி நிறுவனங்களில் பயிலும் மதம் மாறிய கிறித்துவ மாணாக்கர்கள் கல்லூரிகளுக்குச் செலுத்த வேண்டிய கல்விக் கட்டணம் மற்றும் நிறுவன கட்டணங்களிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. அக்கட்டணங்கள் ஆதி திராவிடர் நலத்துறையால் கல்வி நிறுவனங்களுக்கு நேரடியாக ஈடு செய்யப்படுகிறது. மாணாக்கர்கள் தாங்கள் பயிலும் படிப்பிற்கு ஏற்றவாறு பராமரிப்புப்படி வழங்கப்படுகிறது.

2015-2016 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.3590.37 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட உதவித் தொகை விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | உதவித் தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|
| 1 | 2011-12 | 75455 | 934.80 |
| 2 | 2012-13 | 41902 | 1301.42 |
| 3 | 2013-14 | 25484 | 2507.45 |
| 4. | 2014-15 | 41039 | 2804.77 |
| | **மொத்தம்** | **183880** | **7548.44** |

**(இ) தூய்மைப் பணி மற்றும் ஆபத்தான பணிகளில் ஈடுபடுவோரின் குழந்தைகளுக்கு 10 ஆம் வகுப்பு வரை (Pre - Matric) மைய அரசின் உதவித் தொகைத் திட்டம்**

தூய்மையற்ற பணியில் பணி புரிவோரின் (தோல் பதனிடும் தொழில், தோல் உரிக்கும் தொழில், கழிவு பொருள் சேகரிப்பவர்) குழந்தைகளுக்கு, சாதி, மதம் மற்றும் பெற்றோரின் வருமான வரம்பின்றி கீழ்க்காணும் உதவித் தொகை மற்றும் தனி மானியம் வழங்கப்படுகிறது:–

**(1) உதவித்தொகை**

ஒன்றாம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை மாதம் ரூ.110/- (வெளியிலிருந்து பயிலும் மாணாக்கர்களுக்கு).

மூன்றாம் வகுப்பு முதல் 10ஆம் வகுப்பு வரை மாதம் ரூ.700/- (விடுதியில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு).

**(2) தனி மானியம்**

வெளியிலிருந்து பயிலும் மாணாக்கர்களுக்கு ஆண்டுக்கு ரூ.750/–

விடுதியில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஆண்டுக்கு ரூ.1000/-

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.945 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**வழங்கப்பட்ட உதவித் தொகை விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | உதவித் தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 2011-12 | 72268 | 1286.86 |
| 2 | 2012-13 | 39314 | 739.38 |
| 3 | 2013-14 | 40536 | 765.49 |
| 4 | 2014-15 | 41284 | 742.46 |
| | **மொத்தம்** | **193402** | **3534.19** |

**(ஈ) ஒன்பது மற்றும் 10 ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை திட்டம்.**

அரசு அங்கீகாரம் பெற்ற பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கு அவர்களது பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.2 இலட்சத்திற்குள் இருப்பின் கீழ்க்காணும் உதவித் தொகை மற்றும் தனி மானியம் வழங்கப்படுகிறது:–

| வெளியிலிருந்து பயிலும் மாணாக்கர்களுக்கு | தொகை (ரூ.) | விடுதியில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கு | தொகை (ரூ.) |
|---|---|---|---|
| பராமரிப்புப் படி | 150 x 10 மாதங்கள் = 1500 | பராமரிப்புப் படி | 350 x 10 மாதங்கள் = 3500 |
| தனி மானியம் | = 750 | தனி மானியம் | = 1000 |
| | = 2250 | | = 4500 |

இத்திட்டத்தின் கீழ் 2015-2016 ஆம் ஆண்டிற்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணாக்கர்களுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகை

ஆதி திராவிடர்களுக்கு – ரூ.4500 இலட்சம்

பழங்குடியினர்களுக்கு – ரூ.26 இலட்சம்.

**வழங்கப்பட்ட உதவித் தொகை விவரம்**

| நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | உதவித் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 2013-14 | 171346 | 4414.36 |
| 2014-15 | 250253 | 6110.46 |

**(உ) உயர்கல்வி சிறப்பு உதவித் தொகை**

இத்திட்டத்தின் கீழ் கல்வி நிறுவனங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கி வரும் விடுதிகளில் தங்கி இளங்கலைப் பட்டப்படிப்பு மற்றும் பல்தொழில்நுட்ப படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.7,500/-உம், முதுகலைப் பட்டப்படிப்பு மற்றும் தொழிற் படிப்புப் பயிலும் மாணாக்கர்களுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.8,000/-உம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெற பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.



இத்திட்டத்திற்கென 2015-2016ஆம் ஆண்டில் ரூ.2026.47 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட உதவித் தொகை விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | உதவித் தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|
| 1 | 2011-12 | 39353 | 1990.88 |
| 2 | 2012-13 | 26837 | 1974.72 |
| 3 | 2013-14 | 24251 | 2015.44 |
| 4 | 2014-15 | 24241 | 1967.99 |
| | **மொத்தம்** | **114682** | **7949.03** |

**(ஊ) வெளிநாடு சென்று உயர்கல்விப் பயில உதவித் தொகை**

பொறியியல், தொழில்நுட்பவியல் மற்றும் அறிவியல் சார்ந்த துறைகளில் வெளிநாடு சென்று மேற்படிப்பைத் தொடர விரும்பும் மாணாக்கர்களுக்கென இந்த உதவி தொகைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் மாணாக்கர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் ஆண்டில் ரூ.**30** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட உதவித் தொகை விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | உதவித் தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|
| 1 | 2011-12 | 1 | 21.54 |
| 2 | 2012-13 | 1 | 22.35 |
| 3 | 2013-14 | 2 | 46.84 |
| 4 | 2014-15 | 1 | 23.88 |
| | **மொத்தம்** | **5** | **114.61** |

**(எ) முனைவர் பட்டப் படிப்பு பயிலும் மாணாக்கர்களுக்கு நிதியுதவி**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகங்களில் முழுநேர முனைவர் பட்டத்திற்கான ஆராய்ச்சி மேற்கொள்ளும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கு ஆண்டொண்றிற்கு ரூ.50,000/- நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் மாணாக்கர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.2 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் ஆண்டிற்கு ரூ.350 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**வழங்கப்பட்ட உதவித் தொகை விவரம்**

| நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | உதவித் தொகை (ரூ .இலட்சத்தில் ) |
|---|---|---|
| 2013-14 | 560 | 280.00 |
| 2014-15 | 812 | 406.00 |

**2. கல்விக் கட்டணச் சலுகைகள்**

**(அ) கற்பிப்புக் கட்டணச் சலுகை**

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணவ மாணவியர், அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் கல்வி நிறுவனங்களில் பயில்வதற்கு, பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பின்றி கற்பிப்புக் கட்டணம் (Tuition fees) செலுத்துவதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென, 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.1568.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட உதவித் தொகை விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 12432 | 704.70 |
| 2. | 2012-13 | 12888 | 1453.27 |
| 3. | 2013-14 | 11379 | 787.68 |
| 4. | 2014-15 | 10997 | 797.68 |
| | **மொத்தம்** | **47696** | **3743.33** |

### (ஆ) இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் மாணவ மாணவியர்க்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்

அரசு / அரசு நிதியுதவிப் பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் இளங்கலைப் பட்டப்படிப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணவ மாணவியரின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பின்றி, அவர்களுக்குச் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) முதுகலைப் பட்டப்படிப்பு பயிலும் மாணவியர்க்குச் சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணச் சலுகைகள்

அரசு மற்றும் அரசு நிதியுதவிப் பெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் முதுகலைப் பட்டம் படிக்கும் மாணவியர்க்கு மட்டும் அவர்களுடைய பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பின்றி சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.



இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.25 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஈ) ஆறாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை சிறப்புக் கட்டணச் சலுகை

ஆறாம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் அனைத்து ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணவ மாணவியர், சிறப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றனர். இதனால், அந்தந்த கல்வி நிறுவனங்களுக்கு இத்துறை மூலம் இச்சிறப்புக் கட்டணம் விடுவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.163.26 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட உதவித் தொகை விவரம்**

| வ.எண். | நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 110035 | 120.82 |
| 2. | 2012-13 | 92652 | 130.38 |
| 3. | 2013-14 | 93826 | 133.66 |
| 4. | 2014-15 | 96259 | 152.79 |
| | **மொத்தம்** | **392772** | **537.65** |

## (உ) பொதுத் தேர்வுக் கட்டணம் / விண்ணப்பக் கட்டணம் / பதிவுக் கட்டணச் சலுகைகள்.

பத்து மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதி திராவிடர் மாணவ மாணவியர்களுக்கு தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. தமிழ் வழிக் கல்வி தவிர, பிறமொழி வழியில் பயிலும் மாணவ மாணவியர்க்குரிய தேர்வுக் கட்டணத்தையும் இத்துறை, அரசு தேர்வுகள் இயக்ககத்திற்கு திரும்ப வழங்குகிறது. மேலும் அரசு / அரசு உதவிப் பெறும் கல்லூரிகளில் இளங்கலை, முதுகலை மற்றும் தொழிற் கல்விப் பயிலும் மாணவ மாணவியருக்கு விண்ணப்பம் மற்றும் பதிவுக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகின்றது.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.290.14 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 3. பெண் கல்வி ஊக்குவிப்புத் திட்டம்.

சமுதாயத்தை முன்னேற்றம் அடையச் செய்வது கல்வியே ஆகும். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண்



குழந்தைகளின் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காகவும், அவர்களின் பள்ளிச் சேர்க்கையை 100 விழுக்காடாக உறுதிப்படுத்திடவும் “பெண்கல்வி ஊக்குவிப்புத் திட்டம்” செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையில் கல்விப் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினப் பெண் குழந்தைகளுக்கு ஊக்க உதவித்தொகையாக மாதம் ஒன்றுக்கு ரூ.50/- வீதம் 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டம் 2011-2012 ஆம் ஆண்டு முதல் அனைத்து மாவட்டங்களில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பெண் குழந்தைகளும் பயன்பெறத்தக்க வகையில் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.1700 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மாணவியர் இடைநிற்றலைத் தவிர்க்கும் பொருட்டு, 6ஆம் வகுப்பில் கல்வியைத் தொடரும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவியரை ஊக்குவிக்கும் வகையில் மாதம் ஒன்றுக்கு ரூ.100/- வீதம், 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்தப்படுகிறது. மேலும், இத்திட்டமானது 2013-2014 ஆம் கல்வியாண்டு முதல், அரசு மற்றும் அரசு

உதவிப் பெறும் பள்ளிகளில் 7 ஆம் வகுப்பு மற்றும் 8ஆம் வகுப்பு கல்விப் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவிகளை ஊக்கப்படுத்தும் வகையில் விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் மாதம் ஒன்றுக்கு ரூ.150/- வீதம் 10 மாதங்களுக்கு வழங்கப்படுகிறது.

ஆறாம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவிகளுக்குச் செயல்படுத்த 2015–2016 ஆம் நிதியாண்டில் ரூ.3811 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட ஊக்குவிப்புத் தொகை விவரம்**

| வ.எண் | நிதியாண்டு | மாணவியர் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 336379 | 2125.86 |
| 2. | 2012-13 | 319404 | 2000.12 |
| 3. | 2013-14 | 483473 | 4275.14 |
| 4. | 2014-15 | 492918 | 4482.75 |
| | **மொத்தம்** | **1632174** | **12883.87** |

## 4. பரிசுத் தொகை – பொதுத் தேர்வுகள்

தமிழ் மொழியை ஒரு பாடமாகக் கொண்டு 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணவ மாணவியருக்குப் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.



### (i) மாநில அளவிலான பரிசுத் தொகை

பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ மாணவியருக்குப் பரிசுத்தொகை பின்வருமாறு வழங்கப்படுகின்றது:–

| வ எண் | வகுப்பு | விவரம் | நிலை | ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | பத்தாம் வகுப்பு | ஆதி திராவிடர், பழங்குடியினர், மற்றும் மதம் மாறிய கிறித்துவர் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களில் வரும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு.<br>(2X3X3=18 மாணவ மாணவியர்) | முதல் நிலை<br>இரண்டாம் நிலை<br>மூன்றாம் நிலை | **25,000**<br>**20,000**<br>**15,000** |
| 2. | பத்தாம் வகுப்பு (ஐந்து பாடங்கள்) | முதல் மதிப்பெண் பெறும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவர் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் ஒரு மாணவன் அல்லது ஒரு மாணவிக்கு.<br>(**1**X5X3=15 மாணவ மாணவியர்) | பாடம் ஒன்றுக்கு | **1,000** |
| 3. | பன்னிரெண்டாம் வகுப்பு | ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவர் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களில் வரும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு.<br>(2X3X3=18 மாணவ மாணவியர்) | முதல் நிலை<br>இரண்டாம் நிலை<br>மூன்றாம் நிலை | **50,000**<br>**30,000**<br>**20,000** |
| 4. | பன்னிரெண்டாம் வகுப்பு<br>**(25 பாடங்கள்)** | முதல் மதிப்பெண் பெறும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவர் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் ஒரு மாணவன் அல்லது ஒரு மாணவிக்கு<br>(**1**X25X3=75 மாணவ மாணவியர்) | பாடம் ஒன்றுக்கு | **2,000** |

ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டத்தின் கீழ் 126 மாணவ மாணவியர் பயனடைகின்றனர்.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.21.16 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட பரிசுத் தொகை விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 98 | 12.54 |
| 2. | 2012-13 | 109 | 13.35 |
| 3. | 2013-14 | 135 | 14.48 |
| 4. | 2014-15 | 188 | 20.70 |
| | **மொத்தம்** | **530** | **61.07** |

### (ii) மாவட்ட அளவிலான பரிசுத் தொகை

மாவட்ட அளவில் பத்தாம் வகுப்பு மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ மாணவியருக்குப் பரிசுத் தொகை வழங்கப்படுகின்றது.



**மாவட்ட அளவிலான பரிசுத் தொகை 2013–2014 ஆம் கல்வியாண்டிலிருந்து பின்வருமாறு உயர்த்தப்பட்டுள்ளது.**

| வகுப்பு | விவரம் | ஒரு மாணவருக்கு வழங்கப்படும் தொகை ரூ. | பயனாளிகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 10 | **முதல் பரிசு**<br>ஆதி திராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவர் ஆகியோரில் 1 மாணவன் மற்றும் 1 மாணவி 1 மாவட்டத்திற்கு<br>ரூ.3000 x 2 = ரூ.6000<br>32 மாவட்டத்திற்கு<br>32 x ரூ.6000 = 192000 | 3000 | 64 | 1.92 |
| | **இரண்டாம் பரிசு**<br>ஆதி திராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவர் ஆகியோரில் 1 மாணவன் மற்றும் 1 மாணவி 1 மாவட்டத்திற்கு<br>ரூ.2000 x 2 = ரூ.4000<br>32 மாவட்டத்திற்கு<br>32 x ரூ.4000 = 128000 | 2000 | 64 | 1.28 |
| | **மூன்றாவது பரிசு**<br>ஆதி திராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவர் ஆகியோரில் 1 மாணவன் மற்றும் 1 மாணவி 1 மாவட்டத்திற்கு<br>ரூ.1000 x 2 = ரூ.2000<br>32 மாவட்டத்திற்கு<br>32 x ரூ.2000 = 64000 | 1000 | 64 | 0.64 |
| | **மொத்தம்** | | **192** | **3.84** |

| வகுப்பு | விவரம் | ஒரு மாணவருக்கு வழங்கப் படும் தொகை ரூ. | பயனாளிகளின் எண்ணிக்கை | மொத்தத் தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 12 | **முதல் பரிசு**<br>ஆதி திராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவர் ஆகியோரில் 1 மாணவன் மற்றும் 1 மாணவி 1 மாவட்டத்திற்கு<br>ரூ.6000 x 2 = ரூ.12000<br>32 மாவட்டத்திற்கு<br>32 x ரூ.12000 = 384000 | 6000 | 64 | 3.84 |
| | **இரண்டாம் பரிசு**<br>ஆதி திராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவர் ஆகியோரில் 1 மாணவன் மற்றும் 1 மாணவி 1 மாவட்டத்திற்கு<br>ரூ.4000 x 2 = ரூ.8000<br>32 மாவட்டத்திற்கு<br>32 x ரூ.8000 = 256000 | 4000 | 64 | 2.56 |
| | **மூன்றாம் பரிசு**<br>ஆதி திராவிடர்/ பழங்குடியினர் / மதம் மாறிய கிறித்துவர் ஆகியோரில் 1 மாணவன் மற்றும் 1 மாணவி 1 மாவட்டத்திற்கு<br>ரூ.2000 x 2 = ரூ.4000<br>32 மாவட்டத்திற்கு<br>32 x ரூ.4000 = 128000 | 2000 | 64 | 1.28 |
| | **மொத்தம்** | | **192** | **7.68** |



இத்திட்டத்திற்கென 2015–2016 ஆம் நிதியாண்டில் ரூ.**14.46** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட பரிசுத் தொகை விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 325 | 3.52 |
| 2. | 2012-13 | 303 | 6.74 |
| 3. | 2013-14 | 422 | 7.85 |
| 4. | 2014-15 | 548 | 14.46 |
| | **மொத்தம்** | **1598** | **32.57** |

**(iii) ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணவர்களுக்கான மாநில அளவிலான பரிசுத்தொகை**

அரசு ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணவ மாணவியர்களில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகளில் மாநில அளவில் முதல் மூன்று இடங்களைப் பெறும் ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவிக்கு, ஒவ்வொரு பிரிவிலும் 2012–13 ஆம் கல்வியாண்டு முதல் பரிசுத் தொகை பின்வருமாறு வழங்கப்படுகின்றன :–

| பரிசுகள் | தொகை | |
|---|---|---|
| | 10 ஆம் வகுப்பு | 12 ஆம் வகுப்பு |
| முதல் பரிசு | ரூ.10000 | ரூ.10000 |
| இரண்டாம் பரிசு | ரூ.7000 | ரூ.7000 |
| மூன்றாம் பரிசு | ரூ.5000 | ரூ.5000 |

**வழங்கப்பட்ட பரிசுத் தொகை**

| நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 2013-14 | 19 | 1.39 |
| 2014-15 | 18 | 1.32 |
| **மொத்தம்** | **37** | **2.71** |

## 5. மேற்படிப்புக்கான பரிசுகள்

பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணவ மாணவிகளை ஊக்குவிக்கவும் அவர்கள் மேற்படிப்பினைத் தொடரவும் பல்வேறு பரிசுத்தொகைத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.



### (i) முதலமைச்சரின் தகுதிப் பரிசுகள்

பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணாக்கர்களில் அதிக மதிப்பெண் பெறும் முதல் 1000 மாணவர்கள் மற்றும் 1000 மாணவியர்கள் மேற்படிப்பைத் தொடரும் பட்சத்தில் ஆண்டொன்றுக்கு ரூ.3000/– வீதம் 5 ஆண்டுகளுக்கு இப்பரிசுத் தொகை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2015–2016 ஆம் நிதியாண்டில் ரூ.100 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட பரிசுத் தொகை விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 2673 | 44.74 |
| 2. | 2012-13 | 2627 | 78.59 |
| 3. | 2013-14 | 2864 | 85.92 |
| 4. | 2014-15 | 2882 | 87.63 |
| | **மொத்தம்** | **11046** | **296.88** |

### (ii) அண்ணல் காந்தி நினைவுப் பரிசுத்தொகை

பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மதிப்பெண் பெறும் ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவன் மற்றும் ஒரு மாணவி

இத்திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்டு அண்ணல் காந்தியடிகளின் நினைவாக இப்பரிசுத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்த பரிசுத்தொகை முதல் வருடத்திற்கு ரூ.2000/–ஆகவும், அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1500/– ஆகவும் 2011-12ஆம் கல்வியாண்டு முதல் உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வோர் ஆண்டும் இத்திட்டத்தின் கீழ் புதியதாக 64 மாணவ மாணவியர் பயனடைகின்றனர்.

இத்திட்டத்திற்கென 2015–2016 ஆம் நிதியாண்டில் ரூ.5.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட பரிசுத் தொகை விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 126 | 1.65 |
| 2. | 2012-13 | 130 | 2.43 |
| 3. | 2013-14 | 129 | 2.31 |
| 4. | 2014-15 | 174 | 3.87 |
| | **மொத்தம்** | **559** | **10.26** |

### (iii) தகுதி வழிவகைப் பரிசுத்தொகை

பன்னிரெண்டாம் வகுப்பு பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மதிப்பெண் பெறும் மதம் மாறிய கிறித்துவ மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும்,



பழங்குடியின மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் இப்பரிசுத்தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பரிசுத்தொகை 2011–12ஆம் கல்வியாண்டு முதல், முதல் வருடம் ரூ.2000/–உம், அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1500/–உம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.**3.22** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட பரிசுத் தொகை விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 98 | 1.29 |
| 2. | 2012-13 | 106 | 1.60 |
| 3. | 2013-14 | 85 | 1.07 |
| 4. | 2014-15 | 147 | 3.21 |
| | **மொத்தம்** | **436** | **7.17** |

### (iv) பரிசுத் தொகைத் திட்டம்

இத்திட்டத்தின் கீழ் பட்டப்படிப்பு, முதுகலைப் பட்டப்படிப்பு, தொழிற்நுட்பப் படிப்பு ஆகிய படிப்புகளில் 60 விழுக்காடு மற்றும் அதற்கும் அதிகமான மதிப்பெண் பெறும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணவ மாணவியருக்கு சிறப்புப்பரிசு வழங்கப்படுகிறது.

பட்டப்படிப்பிற்கு 2011–2012 ஆம் கல்வியாண்டு முதல் ரூ.2000/-இலிருந்து ரூ.3000/- ஆகவும், முதுகலைப் பட்டப்படிப்பிற்கு ரூ.4000/-இலிருந்து ரூ.5000/- ஆகவும், தொழிற்கல்வி படிப்பிற்கு ரூ.5000/-இலிருந்து ரூ.6000/- ஆகவும் இப்பரிசுத் தொகை உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. மாணவ மாணவியரின் எண்ணிக்கையும் 550இலிருந்து 1000ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2015–2016 ஆம் நிதியாண்டில் ரூ.42 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட பரிசுத் தொகை விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 550 | 18.50 |
| 2. | 2012-13 | 1000 | 42.00 |
| 3. | 2013-14 | 1000 | 42.00 |
| 4. | 2014-15 | 1000 | 42.00 |
| | **மொத்தம்** | **3550** | **144.50** |

**(v) சிறந்த மாணவ மாணவியருக்கான பரிசுத்தொகை**

இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவர் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் 10 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் முதல் இரண்டு மாணவர் மற்றும் இரண்டு மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு, முதல் ஆண்டுக்கு ரூ.1600/–உம், அவர்கள் மேல் படிப்பினைத் தொடரும் நிலையில் அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு, ஓராண்டிற்கு ரூ.2000/– வீதம் வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.9 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட பரிசுத் தொகை விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 408 | 3.80 |
| 2. | 2012-13 | 297 | 3.04 |
| 3. | 2013-14 | 244 | 2.19 |
| 4. | 2014-15 | 620 | 15.67 |
| | **மொத்தம்** | **1569** | **24.70** |

## 6. விலையில்லா பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம்

ஆதி திராவிடர் நலப் பள்ளிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் பொதுப்பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியருக்கு இலவசப் பாடப்புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் கீழ்க்கண்டவாறு வழங்கப்படுகின்றன.

| பாடப்புத்தகங்கள் | 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை |
|---|---|
| குறிப்பேடுகள் | 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை |

மாணவ / மாணவிகளுக்கு 2012-2013 ஆம் கல்வி ஆண்டிலிருந்து இலவச பாடநூல்கள் மற்றும் குறிப்பேடுகள் பள்ளிக் கல்வித்துறை மூலம் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் ஆண்டிற்கு ரூ.**500** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட பாடப்புத்தகங்கள் / குறிப்பேடுகள் விவரம்**

| **வ. எண்.** | **நிதியாண்டு** | **மாணாக்கர்களின் எண்ணிக்கை** | **தொகை (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 258286 | 698.92 |
| 2. | 2012-13 | 176856 | 484.95 |
| 3. | 2013-14 | 184751 | 284.63 |
| 4. | 2014-15 | 154030 | 54.87 |
| | **மொத்தம்** | **773923** | **1523.37** |

## 7. விலையில்லா சீருடைகள் வழங்கும் திட்டம்

ஒன்று முதல் **8**ஆம் வகுப்பு வரை புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் பயன் பெறும் அனைத்து மாணவ மாணவியருக்கும் (ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளும் சேர்த்து) நான்கு இணை விலையில்லா சீருடைகள், சமூக நலத்துறை மூலம்



2014-15 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ மாணவியருக்கும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கி 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கும் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கி பிற துறை பள்ளிகளில் 9 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ மாணவியருக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை மூலம் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.2600 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட சீருடைகள் விவரம்**

| **வ. எண்.** | **நிதியாண்டு** | **மாணாக்கர்களின் எண்ணிக்கை** | **தொகை (ரூ.இலட்சத்தில்)** |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 258286 | 964.18 |
| 2. | 2012-13 | 176856 | 1265.00 |
| 3. | 2013-14 | 184751 | 2600.00 |
| 4. | 2014-15 | 154030 | 1127.51 |
| | **மொத்தம்** | **773923** | **5956.69** |

## 8. பள்ளிகள் மற்றும் விடுதிகளுக்கு விலையில்லா பொது அறிவுப் புத்தகங்கள் வழங்கும் திட்டம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் இந்திய ஆட்சிப்பணி மற்றும் அரசு உயர் பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் எழுத உதவும் பொருட்டு, பொது அறிவுப் புத்தகங்கள் / பத்திரிகைகள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் அனைத்து உயர்நிலை / மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் விடுதிகளுக்கு வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.10.80 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட பொது அறிவுப் புத்தகங்கள் விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | வழங்கப்பட்ட பள்ளிகள் / விடுதிகள் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 1422 | 30.70 |
| 2. | 2012-13 | 1505 | 54.22 |
| 3. | 2013-14 | 1500 | 10.80 |
| 4. | 2014-15 | 1500 | 10.80 |
| | மொத்தம் | **5927** | **106.52** |



## 9. விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்

அரசு / அரசு உதவி பெறும் மற்றும் பகுதியாக உதவி பெறும் (சுயநிதி அடிப்படை) மேல்நிலைப் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணவ மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்படுகின்றன.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதியாண்டில் மாணவிகளுக்கு ரூ.3364.77 இலட்சமும், மாணவர்களுக்கு ரூ.2828.38 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

**வழங்கப்பட்ட மிதிவண்டிகள் விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 172337 | 4947.50 |
| 2. | 2012-13 | 169763 | 5276.18 |
| 3. | 2013-14 | 179160 | 5824.34 |
| 4. | 2014-15 | 170106 | 6053.83 |
| | மொத்தம் | **691366** | **22101.85** |

**10. பத்தாம் வகுப்பில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவ / மாணவியரை சிறந்த தனியார் பள்ளிகளில் சேர்த்தல்.**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்கள் அகில இந்திய அளவில் நடைபெறும் போட்டித் தேர்வுகளில் கலந்து கொள்ளவும், அவர்கள் திறமையை வளர்த்துக் கொள்ளவும் அரசு / அரசு நிதியுதவி பெறும் / மாநகராட்சி / நகராட்சி / ஆதி திராவிடர் நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயின்று 10 ஆம் வகுப்புத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் மாணவ / மாணவியரில், ஒரு மாவட்டத்திற்கு 10 மாணவ / மாணவியர் வீதம் (3 மாணவிகள் உட்பட) மொத்தம் 320 மாணவ / மாணவியர் தேர்வு செய்யப்பட்டு சிறந்த பெயர் பெற்ற தனியார் பள்ளிகளில் 11 ஆம் வகுப்பில் சேர்க்கப்படுகின்றனர். அரசு ஆண்டு தோறும் ஒரு மாணவர் (அல்லது) ஒரு மாணவியருக்கு ரூ.**28000/–** செலவிடுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன்பெற, அவர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலரின் ஆண்டு வருமான வரம்பு ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

இத்திட்டத்திற்காக 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.837.65 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**சிறந்த தனியார் பள்ளிகளில் சேர்க்கப்பட்ட விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 274 | 153.44 |
| 2. | 2012-13 | 269 | 150.64 |
| 3. | 2013-14 | 278 | 127.78 |
| 4. | 2014-15 | 284 | 128.57 |
| | **மொத்தம்** | **1105** | **560.43** |

**11. சிறந்த தனியார் உண்டி உறைவிடப் பள்ளிகளில் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணவ / மாணவியரை 6 ஆம் வகுப்பில் சேர்த்தல்**

அரசு / அரசு நிதி உதவி பெறும் / மாநகராட்சி / நகராட்சி / ஆதி திராவிட நல மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 5 ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ மாணவ / மாணவியரில் சிறந்த மாணவ / மாணவியரைத் தேர்ந்தெடுத்து நற்பெயர் பெற்ற தனியார் உண்டி உறைவிடப்பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் சேர்த்து அவர்கள் தொடர்ந்து 12 ஆம் வகுப்பு வரை பயில ஆகும் செலவினம்

முழுவதையும் அரசே ஏற்கிறது. இத்திட்டத்தின் கீழ் வட்டார அளவில் தனித்தேர்வு ஒன்று நடத்தி, அதில் அதிக மதிப்பெண்கள் பெறும் ஒரு மாணவன் அல்லது ஒரு மாணவி தேர்ந்தெடுக்கப்பட்டு தனியார் உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் சேர்த்துப் பயில ஏற்பாடு செய்யப்படுகிறது.

**சிறந்த தனியார் பள்ளிகளில்**
**மாணாக்கர்கள் சேர்க்கப்பட்ட விவரம்**

| வ.எண். | நிதியாண்டு | மாணாக்கர்களின் எண்ணிக்கை | வழங்கப்பட்ட தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 1428 | 529.92 |
| 2. | 2012-13 | 1758 | 657.65 |
| 3. | 2013-14 | 1986 | 895.71 |
| 4. | 2014-15 | 1417 | 690.38 |
| | **மொத்தம்** | **6589** | **2773.66** |

## 12. விடுதிகள்

கிராமப் பகுதிகளில் உள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ / மாணவியர் இடைநிற்றல் இன்றி பள்ளி, கல்லூரி மற்றும் தொழிற்கல்வி படிப்பினைத் தொடர



அவர்களை ஊக்கப்படுத்தும் வண்ணம் விடுதி வசதிகள் செய்து தரப்படுகின்றன.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் விடுதிகளும் அவற்றில் ஒப்பளிக்கப்பட்டுள்ள மாணவ / மாணவியர் எண்ணிக்கையும் கீழ்வருமாறு:–

| வ. எண். | விடுதிகளின் வகைப்பாடு | விடுதிகள் எண்ணிக்கை | மாணவர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | ஆதி திராவிடர் நல விடுதிகள் | 1,314 | 98,039 |
| 2. | பழங்குடியினர் நல விடுதிகள் | 42 | 2,782 |
| 3. | அரசு உண்டி உறைவிடப் பள்ளிகள் | 306 | 21,973 |
| | **மொத்தம்** | **1,662** | **1,22,794** |

**விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியருக்குச் செய்து தரப்பட்டுள்ள வசதிகள்:–**

i. இரண்டு அடுக்கு படுக்கை வசதி கொண்ட கட்டில்கள் கல்லூரி விடுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

ii. சுகாதாரக் குட்டை தகளி (Napkin Burner) 582 மாணவியர் விடுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

iii. அனைத்து விடுதிகளுக்கும் குடிநீர் சுத்திகரிப்பு கருவிகள், ஈர மாவு அரைக்கும் இயந்திரங்கள், மின்னணு எடை

கருவிகள், வண்ணத்தொலைக்காட்சிப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

iv. சலவை இயந்திரங்கள் 76 ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

v. சுகாதார முறையில் சமைத்திட நீராவி கொதிகலன்கள் 280 ஆதி திராவிடர் நல விடுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

vi. அனைத்து ஆதி திராவிடர் நல விடுதிகளிலும் நூலக வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

vii. மாணவ / மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு பாய் மற்றும் இரண்டாண்டுகளுக்கு ஒரு முறை போர்வைகள் வழங்கப்படுகின்றன.

viii. சோப்பு மற்றும் எண்ணெய் வாங்குவதற்காக பள்ளி மற்றும் தொழிற் பயிற்சி நிலைய விடுதி மாணவ / மாணவி ஒருவருக்கு மாதம் ரூ.50/-உம், கல்லூரி மற்றும் பல்தொழில் நுட்ப கல்லூரி விடுதி மாணவ / மாணவி ஒருவருக்கு மாதம் ரூ.75/-உம் சில்லரை செலவினமாக அவர்களது வங்கி கணக்கில் செலுத்தப்படுகிறது.

ix. ஆதி திராவிடர் நல விடுதி / பழங்குடியினர் நல விடுதி மற்றும் அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கிப்பயிலும் பள்ளி மாணவ / மாணவியருக்கு உணவுக் கட்டணம் ரூ.755/–ஆகவும், கல்லூரி மாணவ / மாணவியருக்கு ரூ.875/– ஆகவும் ஒவ்வொரு மாதமும் வழங்கப்படுகிறது.



**விடுதிகளுக்கு கீழ்க்காணும் வசதிகள் செய்து தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.**

(அ) அனைத்து ஆதி திராவிடர் / பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு உறையுடன் கூடிய தலையணைகள்

(ஆ) மலைப் பகுதிகளில் உள்ள பழங்குடியினர் நல விடுதிகள் மற்றும் பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் தங்கியுள்ள மாணாக்கர்களுக்கு மழை மேலங்கி மற்றும் கம்பளிச் சட்டை

(இ) முதலுதவிப் பெட்டிகள் 1346 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளுக்கும் 100 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கும் வழங்கப்படுகின்றன.

(ஈ) பழங்குடியினர் உண்டி உறைவிட உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி மாணவ / மாணவியருக்கு சூரிய எரிசக்தியுடன் கூடிய விளக்குகள்.

## 13. தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் விடுதிகள் மற்றும் பள்ளிகள்

### (i) விடுதிகள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கும் 36 தொண்டு நிறுவனங்களில் 4977 ஆதி திராவிடர் மாணாக்கர்களும், 777 பழங்குடியின மாணாக்கர்களும் பயன் பெறும் வகையில் உணவுக் கட்டணம் மானியமாக வழங்கப்படுகிறது.

**(ii) பள்ளிகள்:**

திருவண்ணாமலை மாவட்டத்தில் பழங்குடியின மாணவ / மாணவியருக்கு எஸ்.எப்.ஆர்.டி (SFRD) தொண்டு நிறுவனம் மூலம் ஒரு பள்ளியும், தூத்துக்குடி மாவட்டத்தில் ஆதி திராவிடர் மாணவ / மாணவியருக்கு முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளை தொண்டு நிறுவனம் மூலம் ஒரு பள்ளியும் நடத்த அரசு நிதியுதவி வழங்கி வருகிறது.

## 14. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குதல்

இத்திட்டத்தின் கீழ் வீடற்ற ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்படுகின்றன. இதற்கான நிலங்கள் தனியார் பேச்சுவார்த்தை மூலமாகவோ அல்லது ஆதி திராவிடர் நல திட்டங்களுக்கான நில எடுப்புச் சட்டம் 1978 (தமிழ்நாடு சட்டம் 31/1978)–இன் படியோ நில எடுப்பு செய்யப்பட்டு, தகுதியுள்ள பயனாளிகளுக்கு பட்டாக்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்திட்டத்தில் பயன்பெற பயனாளியின் ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் ரூ.40,000/- எனவும், நகர்ப்புறங்களில் ரூ.60,000/- எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.512.93 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**வீட்டு மனைப்பட்டாக்கள் வழங்கப்பட்ட விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 4284 | 301.92 |
| 2. | 2012-13 | 1903 | 298.51 |
| 3. | 2013-14 | 912 | 252.51 |
| 4. | 2014-15 | 1693 | 506.52 |
| | **மொத்தம்** | **8792** | **1359.46** |

## 15. மயானங்கள் மற்றும் மயானப் பாதை வசதி

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மயான வசதி மற்றும் மயானப் பாதைகள் அமைத்துக் கொடுக்க அரசு நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. இத்திட்டத்திற்குத் தேவையான நிலத்தினை வாங்குவதற்கும், கையகப்படுத்துவதற்கும் நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. ஊராட்சிகளும் தங்களுடைய சொந்த நிதியிலிருந்து ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து தருகின்றன. குடிநீர் வசதிக்கு 15 விழுக்காடு மற்றும் இணைப்புச்சாலை வசதிக்கு 10 விழுக்காடு செலவினத்தை ஆதி திராவிடர் நலத்துறை ஏற்கிறது.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.75.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**அடிப்படை வசதிகள் விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | பணிகள் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 59 | 28.63 |
| 2. | 2012-13 | 80 | 62.05 |
| 3. | 2013-14 | 78 | 60.26 |
| 4. | 2014-15 | 12 | 25.63 |
| | **மொத்தம்** | **229** | **176.57** |

### 16. ஈமச்சடங்கு உதவித்தொகை

ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவர் குடும்பத்தில் இறப்பு ஏற்பட்டால் ஈமச் சடங்கிற்கான செலவினை மேற்கொள்ள நிதி உதவியாக ரூ.2,500/- வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.500 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**உதவித் தொகை வழங்கப்பட்ட விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | பயனாளிகளின் எண்ணிக்கை (தோராயமாக) | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 20000 | 500 |
| 2. | 2012-13 | 20000 | 500 |
| 3. | 2013-14 | 20000 | 500 |
| 4. | 2014-15 | 20000 | 500 |
| | **மொத்தம்** | **80000** | **2000** |

### 17. ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான மைய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டம்

ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான மைய அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டங்களை, மேலும் பயனுள்ளதாக்கவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காகவும், குடும்ப வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்களில் உள்ள தடைகளைக் களையவும், ஊக்குவிக்கவும் மாநில அரசின் ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கு கூடுதலாக வலுசேர்க்கும் வகையில் இத்திட்டத்திற்கு மைய அரசு 100 விழுக்காடு மானியம் வழங்குகிறது. வறுமை கோட்டிற்குக் கீழ் வாழும் ஆதி திராவிடர் மக்களின் உற்பத்தித்திறன் மற்றும் வருவாயை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இந்த நிதியில் 80 விழுக்காடு,

ஆதி திராவிட மக்களின் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களான, நிலம் வாங்கும் திட்டம், தனிநபர் நிதி உதவி திட்டம், இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம், சுய உதவிக் குழுக்களுக்காக சுழல் நிதி, சுய உதவிக் குழுக்களுக்குப் பொருளாதார நிதி உதவித் திட்டம், சுய உதவிக் குழுக்களுக்கான பயிற்சி, மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி, குடிமைப்பணி முதல் நிலை தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தொகுதி–1 இல் முதல்நிலை தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கும் நிதி உதவி, சட்டம் மற்றும் பட்டயக் கணக்கர் பட்டம் பயின்ற பட்டதாரிகள் சொந்தமாகத் தொழில் தொடங்க நிதி உதவி வழங்கப்படுகிறது.

மொத்த நிதியில் 10 விழுக்காடு வேலையில்லா ஆதி திராவிடர் இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டுப் பயிற்சியளிக்க உபயோகப்படுத்தப்படுகிறது.

மீதமுள்ள 10 விழுக்காடு நிதி, ஆதி திராவிடர்கள் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் வசிக்கும் இடங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகளை மேற்கொள்ள இத்துறைக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதி ஆண்டில் ரூ. 130 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**சாதனை விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 66094 | 10613.30 |
| 2. | 2012-13 | 43295 | 9676.62 |
| 3. | 2013-14 | 19789 | 9057.45 |
| 4. | 2014-15 | 26484 | 9560.92 |
| | **மொத்தம்** | **155662** | **38908.29** |

## 18. சாதிச் சான்றிதழ்கள்

(i) ஆதி திராவிடர்களுக்கான சாதிச்சான்றிதழ் வழங்கும் அதிகாரம் வட்டாட்சியருக்கும், பழங்குடியினர்களுக்கான சாதிச் சான்றிதழ் வழங்கும் அதிகாரம் வருவாய்க் கோட்டாட்சியர் / சார் ஆட்சியர் / சென்னை மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

(ii) ஆதி திராவிடர்களுக்கு வழங்கப்பட்ட சாதிச் சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழுவும், பழங்குடியினர்களுக்கு வழங்கப்பட்ட சாதி சான்றிதழ்களின் மெய்த்தன்மையினை அறிய மாநில அளவிலான கூர்நோக்குக் குழுவும் கீழ்க்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளன:-

## மாநில அளவிலான கூர்நோக்குக் குழு

<table>
<tr><td>1</td><td>அரசு செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை</td><td>தலைவர்</td><td rowspan="3">பழங்குடியினர் என வழங்கப்பட்ட சான்றிதழ்களின் மெய்த்தன்மையினைக் கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கலாம். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியல் சட்டம் பிரிவு 226–இன்படி உயர் நீதிமன்றத்திலும், பிரிவு 136–இன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம்.</td></tr>
<tr><td>2</td><td>ஆணையர் / இயக்குநர், பழங்குடியினர் நலம்</td><td>உறுப்பினர் செயலர்</td></tr>
<tr><td>3</td><td>மானுடவியல் வல்லுநர்</td><td>உறுப்பினர்</td></tr>
</table>

## மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழு

<table>
<tr><td>1</td><td>மாவட்ட ஆட்சியர்</td><td>தலைவர்</td><td rowspan="3">ஆதி திராவிடர் என வழங்கப்பட்ட சான்றிதழ்களின் மெய்த்தன்மையினைக் கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கலாம். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசியல் சட்டம் பிரிவு 226–இன்படி உயர் நீதிமன்றத்திலும், பிரிவு 136–இன்படி உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம்.</td></tr>
<tr><td>2</td><td>மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்</td><td>உறுப்பினர் செயலர்</td></tr>
<tr><td>3</td><td>மானுடவியல் வல்லுநர்</td><td>உறுப்பினர்</td></tr>
</table>



## விழிப்புணர்வுப் பிரிவு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர்களின் சாதி மெய்த்தன்மையைச் சரிபார்த்து மாவட்ட விழிப்புணர்வு குழுக்கள் மற்றும் மாநில கூர்நோக்குக் குழு ஆகியவற்றிற்கு அறிக்கை அளிக்க ஏதுவாகக் கீழ்க்கண்டவாறு நான்கு மண்டல விழிப்புணர்வுப் பிரிவுகள் அமைக்கப்பட்டுள்ளன.

1. **சென்னை மண்டலம்:** சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்களை உள்ளடக்கிச் செயல்படுகிறது.
2. **சேலம் மண்டலம்:** சேலத்தைத் தலைமையிடமாகக் கொண்டு சேலம், தர்மபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், ஈரோடு, கோயம்புத்தூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களை உள்ளடக்கிச் செயல்படுகிறது.
3. **திருச்சிராப்பள்ளி மண்டலம்:** திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு திருச்சிராப்பள்ளி, கரூர், பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்களை உள்ளடக்கிச் செயல்படுகிறது.
4. **மதுரை மண்டலம்:** மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மதுரை, தேனி, சிவகங்கை, விருதுநகர், புதுக்கோட்டை, ராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களை உள்ளடக்கிச் செயல்படுகிறது.

ஒவ்வொரு விழிப்புணர்வுப் பிரிவும் கீழ்க்கண்ட காவல் துறை அலுவலர்களைக் கொண்டு செயல்படுகிறது :–

| வ. எண் | பதவியின் பெயர் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | முதுநிலை காவல் துறை துணை கண்காணிப்பாளர் | 1 |
| 2. | காவல் ஆய்வாளர்/ சார் காவல் ஆய்வாளர் | 1 |
| 3. | காவலர் | 1 |

தனியரின் சாதிச் சான்றிதழ் மெய்த்தன்மை அறிதல் குறித்து சந்தேகம் ஏற்படும் நிகழ்வுகளில் மாவட்ட விழிப்புணர்வுக் குழுக்கள் / மாநில அளவிலான கூர்நோக்குக் குழு இவ்வினங்களைச் சம்மந்தப்பட்ட விழிப்புணர்வுப் பிரிவுக்குச் சாதி மெய்த்தன்மை அறியும் பொருட்டு அனுப்பப்படுகிறது.

## 19. 1955 ஆம் ஆண்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம்

### (அ) தீண்டாமை ஒழிப்பு

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு எதிராக நிகழும் தீண்டாமை மற்றும் வன்கொடுமைகளைத் தடுக்க அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இதற்காக, 1955 ஆம் ஆண்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டு வன்கொடுமைகள் தடுப்புச் சட்டம், 1995 ஆம் ஆண்டு வன்கொடுமைகள் தடுப்பு விதிகள் போன்றவை மைய அரசால் உருவாக்கப்பட்டு, மாநில அரசால் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1989 ஆம் ஆண்டின் ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டத்திற்கான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு, 04.03.2014 அன்று இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்களால் அவசரச் சட்டமாக வெளியிடப்பட்டது. பின்னர், இச்சட்டம், ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்கள் (வன்கொடுமைத் தடுப்பு) (திருத்தங்கள்) அவசரச்சட்டம் 2014 என்று பெயரிடப்பட்டுள்ளது. 1989 ஆம் ஆண்டின் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகள் தற்போது புதிய அவசரச் சட்டத்தின்படி பதிவு செய்யப்படுகின்றன.

இதற்கென கூடுதல் காவல்துறைத் தலைவர் தலைமையின் கீழ் சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு ஒன்று சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு இயங்கி வருகிறது.

இந்த இரு சட்டங்களின் கீழ் (i) வழக்குகளைப் பதிவு செய்தல், விசாரணை செய்தல், வழக்குத் தொடுத்தல் ஆகியவற்றை மேற்பார்வை செய்வதும், (ii) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்குப் பாதுகாப்பு அரணாக விளங்குவதுமே சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவின் பணிகளாகும்.

**சிறப்பு நீதிமன்றங்கள்**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் மற்றும் குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் ஆகிய சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விரைந்து முடிக்க சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இச்சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்க 6 சிறப்பு நீதிமன்றங்களை தஞ்சாவூர், திருச்சி, மதுரை, திருநெல்வேலி, விழுப்புரம் (கடலூரை உள்ளடக்கியும்) மற்றும் சிவகங்கை (இராமநாதபுரத்தை உள்ளடக்கியும்) ஆகிய மாவட்டங்களில் அரசு அமைத்துள்ளது. இதர மாவட்டங்களில், தற்போதுள்ள குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு, இவ்வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. மேலும், 37 நடமாடும் காவல் குழுக்கள், ஒவ்வொன்றும் ஒரு காவல் துறை ஆய்வாளர் தலைமையிலும், 11 மேற்பார்வைக் குழுக்கள் சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம்,



வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருச்சி, தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம் மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்கள் ஒவ்வொன்றும் ஒரு காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் தலைமையிலும் செயல்பட்டு வருகின்றன.

1995 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான வன்கொடுமைத் தடுப்பு விதிகளில் விதி எண்.17(1)இன்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சித்தலைவர் தலைமையில் 5 அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மற்றும் மேற்பார்வைக் குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பிரச்சனைகளை அறிந்த நல்ல நோக்கம் கொண்ட நபர் ஒருவரை உறுப்பினராக நியமனம் செய்வதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. மாவட்ட அளவிலான குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவது பற்றியும், பாதிக்கப்பட்டவர்களுக்குத் தீருதவி மற்றும் மறுவாழ்வு அளிப்பது குறித்தும், இச்சட்டங்களின் கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை பற்றியும் ஆய்வு செய்கிறது. மேலும், இச்சட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக ஆய்வு

செய்யவும், மேற்பார்வையிடவும் மாநில அளவில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் விழிப்புணர்வு மற்றும் மேற்பார்வைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமை தடுப்பு) சட்டம் 1989 விதி எண்.17–இல் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்கள், 08.11.2013 நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டதன் அடிப்படையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள உட்கோட்டங்களிலும் (வருவாய் கோட்ட அலுவலகம்) உட்கோட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக்குழு அமைத்து, தமிழக அரசால், அரசு ஆணை (நிலை) எண்.6, ஆதி திராவிடர் மற்றம் பழங்குடியினர் நலத்துறை நாள்.20.01.2015இல் ஆணை வெளியிடப்பட்டன. இக்குழுவிற்கு உட்கோட்ட நீதிபதி தலைவராகவும், 5 அலுவல் சார் அலுவலர்கள் மற்றும் 4 அலுவல் சாரா அலுவலர்கள் உறுப்பினர்களாகவும் இருப்பர். இக்குழு மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூட்டப்பட்டு, உட்கோட்ட நிர்வாகத்திடமிருந்து வரப்பெற்ற இந்தச் சட்டத்தின்படியான பல்வேறு அறிக்கைகளை ஆய்வு செய்யும்.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.450 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



**தீருதவி வழங்கப்பட்ட விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 1278 | 217.28 |
| 2. | 2012-13 | 933 | 1385.79 |
| 3. | 2013-14 | 1530 | 526.71 |
| 4. | 2014-15 | 2056 | 694.26 |
| | **மொத்தம்** | **5797** | **2824.04** |

**(ஆ) தீண்டாமை ஒழிப்புப் பிரச்சாரம்**

தீண்டாமையை பின்பற்றினால் ஏற்படும் தீமைகள் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்படுகின்றன. தீண்டாமை ஒழிப்புத் தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் குறுந்திரைப் படங்கள் கிராமங்களில் திரையிடப்படுகின்றன.

மனித நேய வார விழா ஒவ்வோர் ஆண்டும், அனைத்து மாவட்டங்களிலும் ஜனவரி 26 முதல் 30 ஆம் தேதி வரை, பொது மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடத்தப்படுகிறது. விழா நடத்தப்படுவதற்கு மாவட்ட அளவில் ரூ.15,000/-உம், மாநில அளவில் ரூ.65,000/-உம் வழங்கப்பட்டது. இத்தொகை 2014-15 ஆம் ஆண்டு முதல் மாவட்டத்திற்கு ரூ.50,000/- ஆகவும், மாநில அளவில் ரூ.1,00,000/- ஆகவும் உயர்த்தி வழங்கப்படுகிறது.

வில்லுப்பாட்டு கலைஞர்கள் மூலம் பொதுமக்களுக்குத் தீண்டாமைக் கொடுமைகள் குறித்து விளம்பரப்படுத்தப்படுகிறது.

மேலும், சமபந்தி விருந்து ஒவ்வோர் ஆண்டும் ஜனவரி 26, ஆகஸ்டு 15 மற்றும் அக்டோபர் 2 ஆகிய நாட்களிலும், அந்தந்த மாவட்டங்களில் முக்கியத்துவம் வாய்ந்த உள்ளூர் விடுமுறை நாட்களிலும் ஏற்பாடு செய்யப்படுகிறது. சமபந்தி விருந்து ஏற்பாடு செய்ய தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் ஈடுபடுத்தப்படுகின்றன.

மேலும், தீண்டாமை ஒழிப்பு குறித்து மக்களுக்கு எடுத்துரைக்க 2 விளம்பரப் பிரிவுகள், ஒன்று சென்னையிலும் மற்றொன்று திருச்சிராப்பள்ளியிலும் செயல்பட்டு வருகின்றன.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.73.09 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட தொகை விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | 2011-12 | 57.08 |
| 2. | 2012-13 | 78.14 |
| 3. | 2013-14 | 57.99 |
| 4. | 2014-15 | 20.41 |
| | **மொத்தம்** | **213.62** |



### (இ) இன நல்லினக்கத்துடன் திகழும் சிறந்த கிராமங்களைத் தேர்ந்தெடுத்தல்

இத்திட்டத்தின் கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னையைத் தவிர) தீண்டாமையை விட்டொழித்து பொது மக்கள் நல்லிணக்கத்துடன் வாழும் ஒரு கிராமம் தேர்ந்தெடுக்கப்பட்டு அக்கிராமத்திற்கு ரூ.10 இலட்சம் நிதி வழங்கப்படுகிறது.

2015-2016 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.310 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**வழங்கப்பட்ட தொகை**

| வ. எண். | நிதியாண்டு | கிராமங்கள் | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 31 | 62.00 |
| 2. | 2012-13 | 30 | 300.00 |
| 3. | 2013-14 | 30 | 300.00 |
| 4. | 2014-15 | 31 | 310.00 |
| | **மொத்தம்** | **122** | **972.00** |

## 20. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் கலை, இலக்கிய மேம்பாட்டுப் பணி அமைப்பு

கலை, கலாச்சாரம், இலக்கியம் போன்ற துறைகளில் சிறந்த படைப்புகளை உருவாக்கும் ஆதி திராவிடர் மற்றும்

பழங்குடியினரை ஊக்குவிக்கவும் அவர்களின் ஆராய்ச்சி தொடர்புடைய செயல்பாடுகளுக்கு உதவிடவும் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டு வைப்புக் கணக்கில் உள்ளது. அதிலிருந்து பெறப்படும் வட்டித்தொகை தேர்வு செய்யப்படும் சிறந்த எழுத்தாளர்களுக்கு, பரிசுத் தொகையாக வழங்க பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வோர் ஆண்டும், 10 ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ எழுத்தாளர்கள் மற்றும் ஓர் ஆதி திராவிடர் அல்லாத எழுத்தாளர் ஆக மொத்தம் 11 எழுத்தாளர்கள் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்காகத் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு நூல்களை வெளியிட ரூ.40,000 பரிசுத்தொகை வழங்கப்படுகிறது.

## 21. கொத்தடிமை ஒழிப்பு

கொத்தடிமை முறையானது இந்திய அரசியலமைப்புச் சட்ட அடிப்படை விதிகள் 21 மற்றும் 23 ஆகியவற்றின்படி தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, மைய அரசு 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டத்தை இயற்றியுள்ளது.

கொத்தடிமை முறை என்பது ஒரு தொழிலாளர் முற்றிலும் கட்டாயப்படுத்தப்பட்ட அல்லது பகுதியளவில்



கட்டாயப்படுத்தப்பட்ட பணிச் சூழலில் ஊதியமின்றியோ அல்லது மிகக் குறைந்த ஊதியத்துக்காகவோ பணிபுரியும் முறையாகும். கொத்தடிமையாகப் பணிபுரியும் தொழிலாளிக்கு, ஒரு பணியிடத்திலிருந்து மற்றொரு பணியிடத்துக்கு மாறுவது, வேறுவிதமான வாழ்வாதாரங்களை உருவாக்கிக் கொள்வது மற்றும் நாடு முழுவதும் எங்கு வேண்டுமானாலும் சென்று வருவது போன்ற உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

கொத்தடிமை முறையினைப் பின்பற்றாமல் தடுக்கவும், கொத்தடிமைகளைக் கண்டறியவும் விடுவிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும் தமிழக அரசு மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரின் தலைமையில் குழுக்களை அமைத்துள்ளது.

கொத்தடிமை முறைச் (ஒழிப்பு) சட்டத்தின் படி வருவாய் கோட்டாட்சியர்கள் / சார் ஆட்சியர்கள் கொத்தடிமைகள் விடுவிப்பு மற்றும் மறுவாழ்வு அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். இச்சட்டம் தீவிரமாகச் செயல்படுத்துவதை உறுதி செய்ய விடுவிப்பு மற்றும் மறுவாழ்வு திட்டங்களுக்கு மாவட்ட ஆட்சியர்களும் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். கொத்தடிமையிலிருந்து விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர் குடும்பங்களுக்கு உடனடி நிவாரணமாக ரூ.1000/- வழங்கப்படுவதுடன், அதனைத் தொடர்ந்து வருமானம் ஈட்டக் கூடிய தொழில் செய்யத்

தேவையான சொத்து உருவாக்கத்திற்காக ரூ.19,000/- வழங்கப்படுகிறது.

மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழுவின் பணிகளான கொத்தடிமைத் தொழிலாளர்களை அடையாளம் காணுதல், விடுவித்தல், விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளின் மறுவாழ்வு ஆகிய பணிகளின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்காக மாநில அளவிலான, கொத்தடிமை விழிப்புணர்வுக் குழு ஒன்று தலைமைச் செயலாளரின் தலைமையில் அமைத்து அரசாணை எண்.79, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள். 17.09.2002 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

இத்திட்டத்திற்கென 2015-2016 ஆம் நிதியாண்டில் ரூ.125 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**கொத்தடிமைகள் விடுவிக்கப்பட்ட விவரம்**

| வ. எண். | நிதியாண்டு | பயனாளிகளின் எண்ணிக்கை | தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | 2011-12 | 507 | 27.11 |
| 2. | 2012-13 | 398 | 42.54 |
| 3. | 2013-14 | 965 | 66.81 |
| 4. | 2014-15 | 610 | 73.39 |
| | **மொத்தம்** | **2480** | **209.85** |



# II. பழங்குடியினர் நலன்

## முன்னுரை

பழங்குடியினரின் நலனைப் பேணிக்காப்பதற்கென ஒருங்கிணைந்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையிலிருந்து தனியாகப் பிரிக்கப்பட்டு ஓர் இயக்ககம் 01.04.2000 இல் தோற்றுவிக்கப்பட்டு இயங்கி வருகிறது. சேலம், திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், தர்மபுரி, நாமக்கல், திருவள்ளூர், காஞ்சிபுரம், நீலகிரி, கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, ஈரோடு, திருச்சிராப்பள்ளி, கடலூர், மதுரை, அரியலூர், திருநெல்வேலி, சென்னை ஆகிய 18 மாவட்டங்களில் பழங்குடியினர் மக்கள் தொகை 10,000 பேருக்கும் கூடுதலாக உள்ளது.

ஏழ்மைச் சூழ்நிலையில் வாழும் நிலை, மலைப்பகுதிகளில் அடிப்படை வசதிகள் குறைவு, ஊட்டச்சத்துக் குறைபாடுகள், பள்ளிகளில் பாதியிலேயே படிப்பை நிறுத்தி விடுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு, குறைந்த எழுத்துப்படிப்பு வீதம், வன வளங்கள் அழிக்கப்படுவதால் மக்கள் இடம் பெயர்தல் ஆகிய அம்சங்களில் இவ்வரசு சிறப்பு கவனம் செலுத்தி வருகின்றது.

## ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப்பகுதிகள் (ITDP)

மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் பழங்குடியினர் வாழும் 10 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளைக் கொண்ட சேலம் (ஏற்காடு, பச்சமலை, அருநூத்துமலை மற்றும் கல்ராயன்மலை), நாமக்கல் (கொல்லிமலை), விழுப்புரம் (கல்ராயன்மலை), திருவண்ணாமலை (ஜவ்வாதுமலை), திருச்சிராப்பள்ளி (பச்சமலை), தர்மபுரி (சித்தேரி மலை), மற்றும் வேலூர் (ஜவ்வாது மற்றும் ஏலகிரிமலை) ஆகிய 7 மாவட்டங்களில் ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

## அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர் (PTG)

மக்கள் தொகை அடிப்படையில் பழங்குடியினரை இருவகையாகப் பிரிக்கலாம். மக்கள் ஒரே இடத்தில் அதிகமாக காணப்படும்போது, அவர்களைப் பழங்குடியினர் குழுவாகவும், மாநிலத்தில் அனைத்து மாவட்டங்களிலும் பரவலாகக் காணப்படும் ஏனைய பழங்குடியினர், பரவி வாழும் பழங்குடியினர் என வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மாநிலத்திலுள்ள 36 வகையான பழங்குடியினரில் 6 வகை பழங்குடியினர், அதாவது தோடர், கோத்தர், குரும்பன், இருளர், பனியர் மற்றும் காட்டுநாயக்கன் இனத்தவரின் மக்கள் தொகை குறைந்து கொண்டோ அல்லது அதிகரிக்காமல் நிலையாகவோ உள்ளது. எனவே, இவ்வினத்தவர், அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினராகக் கண்டறியப்பட்டுள்ளனர்.



## 1. மைய அரசின் உதவித் தொகை

மைய அரசு (i) பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் சிறப்பு மத்திய உதவி (ii) இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவு 275(1) இன் கீழ் ஒதுக்கீடு மற்றும் (iii) அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினருக்குச் சிறப்பு ஒதுக்கீடு ஆகிய மூன்று திட்டங்களின் கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கி வருகிறது.

### (அ) பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மைய நிதியுதவி

பழங்குடியினர் வாழும் பகுதிகளில் 60 விழுக்காடு நிதி, வருவாய் ஈட்டும் திட்டங்களுக்காகவும், 30 விழுக்காடு அதே பகுதியில் வருவாய் ஈட்டும் தொழில்களுக்குண்டான உள்கட்டமைப்புப் பணிகள் செய்வதற்காகவும் செலவிடப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பழங்குடியின குழுக்களுக்கு கறவை மாடுகள், ஆடுகள் வழங்கப்படுவதுடன், சில பொருளாதார திட்டங்களுக்காகவும், இந்த நிதியுதவி வழங்கப்படுகிறது. 2013–2014 ஆம் ஆண்டு முதல் 10

விழுக்காடு நிதி வேலைவாய்ப்புப் பெறுவதற்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2013–2014 ஆம் ஆண்டு வரையில் ரூ.1453.30 இலட்சத்தில் 5190 பேர் பயன்பெற்றுள்ளனர்.

**(ஆ) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 275(1) கூறு**

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 275(1) கூறு கீழ், மைய அரசால் வழங்கப்பட்ட நிதியுதவியிலிருந்து பழங்குடியினர் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள், அதாவது நடைமேம்பாலம், இணைப்புச் சாலைகள், மின் இணைப்பு, தடுப்பணை, கோழிக் குஞ்சு பொரிப்பகம் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும், சேலம் மாவட்டத்தில் அபிநவம் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் வெள்ளிமலை ஆகிய இடங்களிலுள்ள ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளைப் பராமரிப்பதற்கு இந்நிதி பயன்படுத்தப்படுகிறது. 2006 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்த வனங்களில் குடியிருப்போர் சட்டத்தைச் செயல்படுத்துவதற்கும் இந்நிதி பயன்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2013–2014 ஆம் ஆண்டு வரை ரூ.1262.97 இலட்சத்தில் 1333 பேர் பயன்பெற்றுள்ளனர்.



**(இ) அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர் மேம்பாடு**

அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக, மைய அரசு ஆண்டுதோறும் நிதியுதவி வழங்கி வருகிறது. இத்திட்டத்தின் கீழ் மைய அரசு 2013–2014 ஆம் ஆண்டு முதல் ரூ.20 கோடி தொகையினை வருடந்தோறும் விடுவிக்கின்றது.

அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியின மக்களுக்கென்று பாரம்பரிய வீடுகள் கட்டுதல், கறவை மாடுகள் வழங்குதல், குடிநீர் வசதி மற்றும் தெருவிளக்குகள் அமைத்தல் போன்ற வசதிகள் இந்நிதியின் வாயிலாக செய்யப்படுகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2013-2014 ஆம் ஆண்டு வரை ரூ.4475.94 இலட்சத்தில் 8066 பேர் பயன் பெற்றுள்ளனர்.

**(ஈ) பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) 2006 சட்டத்தைச் செயல்படுத்துதல்**

மைய அரசு, 2006 ஆம் ஆண்டு பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டம் 29.12.2006 முதல் நடைமுறைக்கு வந்தது. இச்சட்டத்தின்படி, 13.12.2005 ஆம் நாளுக்கு முன்பிருந்தே வனங்களில் குடியிருந்து வரும் பழங்குடியினருக்கும் 13.12.2005 ஆம்

தேதிக்கு முன்பு மூன்று தலைமுறைகளாக அதாவது 75 ஆண்டுகளாக வனங்களில் குடியிருக்கும் பிற மரபு வழியினருக்கும் வன உரிமைப் பட்டா வழங்குவதற்கு வகைச் செய்யப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின் செயல்பாடு பின்வரும் குழுக்களால் கண்காணிக்கப்படுகிறது.

i) தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்ட மாநில அளவிலான கண்காணிப்புக் குழு
ii) மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான குழு
iii) வருவாய் கோட்ட அலுவலரைத் தலைவராகக் கொண்ட உட்கோட்ட அளவிலான குழு

இதுவரையில் வன அனுபவ உரிமை கோரி 29,887 விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளன. அவற்றில் 5,869 விண்ணப்பங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டு வன அனுபவ உரிமை வழங்குவதற்குத் தயாராக உள்ளது. எனினும், சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.4533/2008 இல் வன அனுபவ உரிமை வழங்குவதற்கு எதிராக வழங்கப்பட்ட தடையாணையின் அடிப்படையிலேயே முடிவு மேற்கொள்ளப்படும். உச்சநீதிமன்ற ஆணையின்படி இவ்வழக்கு உயர்நீதிமன்றத்திலிருந்து உச்சநீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. உச்சநீதிமன்ற வழக்குரைஞரைக் கலந்து ஆலோசித்து இவ்வழக்கில் தற்போது மாநில அரசால்



இடைநிலை மனு (Interlocutary Petition) தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## 2. பழங்குடியினர் துணைத் திட்டம்

'பழங்குடியினர் துணைத் திட்டம்' 5வது ஐந்தாண்டு திட்ட காலத்தின் தொடக்கக் காலமான 1976-77 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்துணைத்திட்டத்தின்படி பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டிற்கென மாநில ஆண்டுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் தமிழ்நாட்டுப் பழங்குடியினர் மக்கள் தொகை விகிதாச்சாரமான 1.10 விழுக்காட்டிற்கு குறையாமல் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.

மாநில அளவில் பழங்குடியினர் துணைத் திட்டத்தின் கீழ் திட்டங்களை வகுக்கவும், செயல்படுத்தவும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை ஒருங்கிணைப்புத் துறையாகவும் (Nodal Department) அத்துறையின் அரசுச் செயலாளர் ஒருங்கிணைப்பு அலுவலராகவும் (Nodal Officer) நியமிக்கப்பட்டுள்ளார். இத்துணைத் திட்டங்களை மாவட்ட அளவில் கண்காணிக்கவும் ஆய்வு செய்யவும் பழங்குடியினர் நல இயக்குநர், கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்

33 துறைத் தலைமையகங்களை உள்ளடக்கிய 18 செயலாக்கத் துறைகள் வாயிலாகப் பழங்குடியினர் துணைத் திட்டம் பழங்குடியினரின் வளர்ச்சி மற்றும் நலனுக்காகச் செயல்படுத்தப்படுகிறது. செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகள், பழங்குடியினருக்கான திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்காகப் பழங்குடியினர் நலத்துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர்.

பழங்குடியினர் துணைத்திட்டத்தின் கீழ் 2015-2016 ஆம் நிதியாண்டில் (மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ.55,100 கோடியில்) ரூ.658 கோடி (1.19 விழுக்காடு) ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்நிதியானது, தமிழ்நாட்டிலிருக்கும் பழங்குடி மக்கள் தொகை விழுக்காட்டை (1.10) காட்டிலும் அதிகமாகும்.

## 3. விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர்** அவர்கள் பழங்குடியினரின் விரிவான பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்திற்காக 2015–2016 ஆம் ஆண்டு ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம், பழங்குடியினர் நில மேம்பாட்டு பணிகள், கூரை வீடுகள்



சீரமைப்புப் பணிகள், சாலைப் பணிகள், அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளை மேம்படுத்துதல், குடிநீர் வசதி, பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் தாட்கோ மூலம் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் கீழ் 2013–2014 ஆம் ஆண்டு வரை ரூ.**5120.12** இலட்சம் செலவிடப்பட்டுள்ளது.

## 4. பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் மற்றும் பழங்குடியினர் அருங்காட்சியகம்

பழங்குடியினர் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும், பழங்குடியினர் வாழ்க்கை முறை, கலாச்சாரம், மொழி, சமூக–பொருளாதாரம் மற்றும் கல்வி நிலை முதலியவற்றை ஆராய்ச்சி செய்வதற்காகவும் மைய அரசின் நிதியுதவியுடன் **1983**ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில், முத்தரை பாலாடா எனும் இடத்தில் “பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்” ஒன்று அமைக்கப்பட்டது. இம்மையம் மானுடவியல் நிபுணத்துவம் வாய்ந்த இயக்குநர் ஒருவரின் தலைமையில் செயல்பட்டு வருகிறது. இங்கு நூலகம் ஒன்றும், பழங்குடியினர் அருங்காட்சியகம் ஒன்றும், அமைக்கப்பட்டுள்ளது. பழங்குடியினரின் வாழ்க்கை முறை குறித்த புகைப்படங்கள் மற்றும் கலைப் பொருட்கள் ஆகியன

பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன. தற்பொழுது பழங்குடியின மக்களின் கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஒரு விற்பனைக் கூடமும் அமைக்கப்பட்டுள்ளது.

**5. தொழில்நெறி வழிகாட்டும் மையம்**

பழங்குடியின இளைஞர்களின் வேலை வாய்ப்புக்கு வழிகாட்டும் வகையில், தொழில்நெறி வழிகாட்டும் மையம் ஒன்று நீலகிரி மாவட்டம், உதகமண்டலத்தில் இயங்கி வருகிறது.

**6. தொழிற்பயிற்சி மையங்கள் (ITIs)**

பழங்குடியினருக்கென தொழிற்பயிற்சி மையங்கள் சேலம் மாவட்டம் கருமந்துரையிலும், நாமக்கல் மாவட்டம் கொல்லிமலையிலும், திருவண்ணாமலை மாவட்டம் ஜமுனாமரத்தூரிலும், கோயம்புத்தூர் மாவட்டம் ஆனைக்கட்டியிலும், நீலகிரி மாவட்டம் கூடலூரிலும் மற்றும் விழுப்புரம் மாவட்டம் சங்கராபுரம் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.



## III. தமிழ் நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம்

### 1. முன்னுரை

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), 1974 ஆம் ஆண்டு ஆதி திராவிடர்களுக்கு தீப்பிடிக்காத வீடுகள் கட்டுவதற்காக இந்திய நிறுவனச் சட்டம், 1956 இன் கீழ் நிறுவப்பட்டது. 1980–81 ஆம் ஆண்டிலிருந்து ஆதிதிராவிடர்களின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களும் இந்நிறுவனத்தின் மூலம் செயல்படுத்தப்படுகின்றன.

### 2. பங்கு மூலதனம்

1974 ஆம் ஆண்டு இக்கழகம் ரூ.1 கோடி பங்கு மூலதனத்துடன் நிறுவப்பட்டது. இக்கழகத்தின் தற்போது அங்கீகரிக்கப்பட்ட மற்றும் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் முறையே ரூ.150 கோடி மற்றும் ரூ.128.27 கோடி ஆகும். 1980 ஆம் ஆண்டிலிருந்து இக்கழகத்தின் செலுத்தப்பட்ட மூலதனத்தை மாநில அரசும், மத்திய அரசும் 51:49 என்ற விகிதத்தில் பகிர்ந்தளிக்கின்றன. பெருங்கடன் சுமையிலிருந்த இந்நிறுவனத்தை தமிழ்நாடு அரசு 2003–04 ஆம் ஆண்டு

முதல் 2012–13 ஆம் ஆண்டு வரையிலான மாநில அரசின் பங்குத்தொகையாக ரூ.33.15 கோடியினை வழங்கியதன் மூலம் இக்கழகத்திற்குப் புத்துயிர் வழங்கியுள்ளது.

## 3. நோக்கம்

1. கட்டுமானப் பணிகளை மேற்கொள்ளுதல்
2. பொருளாதார மேம்பாட்டு திட்டங்களைச் செயல்படுத்துதல்
3. திறன் வளர்க்கும் பயிற்சி அளித்தல்; போட்டித் தேர்வுகள் மற்றும் உயர்கல்வி தேர்வுகளுக்குப் பயிற்சி அளித்தல்
4. சமூக ஏணியில் அடித்தட்டில் மிக வறிய நிலையில் உள்ள ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினரது பொருளாதார நிலையினை மேம்படுத்துவதற்கு அரசு பல சீரிய முயற்சிகள் மேற்கொண்டாலும், ஆதிதிராவிட மக்களின் சமூகப் பொருளாதார முன்னேற்றத்திற்கும் அவர்களது வாழ்க்கைத் தரத்திற்குமிடையே உள்ள இடைவெளியானது மிகுந்தே காணப்படுகிறது. இவ்விடை வெளியினைக் குறைக்க பல்வேறு சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இதன் ஓர் அங்கமாய் ஆதிதிராவிடர் மக்கள், பல்வேறு பொருளாதார திட்டங்களின் கீழான, 2011–12 ஆம் ஆண்டு வரை தனி நபருக்கு வழங்கிவந்த மானியத் தொகை ரூ.25,000/–ஐ, ரூ.2.25 இலட்சமாக உயர்த்தியுள்ளது. இந்த மானியத் தொகை உயர்வானது ஆதி திராவிடர் மக்களின் சமூக பொருளாதார வாழ்க்கைத் தரத்தில் நிரந்தர மாற்றத்தை ஏற்படுத்தி வருகிறது.



## 4. ஆதி திராவிட மக்களுக்காக தாட்கோவினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

1) நிலம் வாங்கும் திட்டம் (மகளிருக்கு மட்டும்)
2) நிலம் மேம்பாட்டுத் திட்டம்
3) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்
4) தொழில் முனைவோர் சிறப்புத் திட்டம் – பெட்ரோல், டீசல், மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கான சிறப்புத் திட்டம்
5) இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம்
6) இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த தொழில்களுக்கான நிதியுதவித் திட்டம்
7) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்காகச் சுழல் நிதி
8) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கானப் பொருளாதார கடன் உதவித் திட்டம்
9) இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதி உதவி
10) தமிழ்நாடு தேர்வாணையம் தொகுதி-1 முதன்மைத் தேர்வு எழுதுவதற்கு நிதி உதவி

11)இளம் சட்டப் பட்டதாரிகளுக்குச் சுயமாகத் தொழில் செய்வதற்காக நிதி உதவி

12)பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர்கள் சுயமாக தொழில் புரிய நிதி உதவி

13)மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை நிதி

14)மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி

## 5. மானியத்துடன் கூடிய கடன் திட்டங்கள்

### (i) நிலம் வாங்கும் திட்டம்

ஆதி திராவிடர் சமூகத்தின் நில உடைமையினை அதிகரிக்கவும், நில உடைமையே மகளிரது சமூக நிலை உயர்வினை காட்டும் அளவு கோல் என்பதாலும் மகளிருக்கான சிறப்புத் திட்டமான நிலம் வாங்கும் திட்டம் 2004–05 முதல் செயல்படுத்தப்படுகிறது.

**இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள்**

- நிலம் ஆதி திராவிட மகளிர் பெயரில் பதிவு செய்யப்படுகிறது
- அரசு இத்திட்டத்தின் கீழ் ரூ.1 இலட்சம் மதிப்புள்ள நிலத்திற்கு முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்திலிருந்து விலக்கு அளித்துள்ளது.
- ஆதிதிராவிடர் அல்லாத பிற இனத்தவரிடமிருந்து நிலம் வாங்கப்படுகிறது.



இத்திட்டத்தின் கீழ் 2014–15 ஆம் ஆண்டில் 36 மகளிருக்கு ரூ.123.53 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### (ii) நில மேம்பாட்டுத் திட்டம்

2013–14 ஆம் ஆண்டிலிருந்து ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த நில உரிமையாளர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற வகை செய்யப்பட்டுள்ளது. நீர்ப்பாசன வசதி ஏற்படுத்துவதன் மூலம் நில பயன்பாடு மற்றும் நிலத்தின் வழி வருவாய் பெருக்குதலே இத்திட்டத்தின் நோக்கமாகும்.

இத் திட்டத்தின் மூலம் 2014–15 ஆம் ஆண்டில் 57 பயனாளிகளுக்கு ரூ.139.17 இலட்சம் நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

### (iii) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

ஆதி திராவிடர் மக்களின் வறிய நிலையைக் குறைக்க 18 வயது முதல் 55 வயது வரை உள்ள ஆதிதிராவிடர்கள் பயன் பெறும் வகையில் பல்வேறு தொழில்களுக்கு நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பயன் பெற கல்வித் தகுதி வலியுறுத்தப்படவில்லை. இத்திட்டத்தின் கீழ் தனி நபர் மற்றும் குழுக்கள் பயன் பெறுகின்றனர்.

2014–15 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் 3795 பயனாளிகளுக்கு, ரூ.13243.72 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### (iv) தொழில் முனைவோர் சிறப்புத் திட்டம் – பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கான சிறப்புத் திட்டம்

பெட்ரோல், டீசல் மற்றும் எரிவாயு சில்லறை விற்பனை நிலையம் அமைப்பதற்கு நிதி உதவி வழங்கும் இச்சிறப்புத் திட்டம் 2012–13 ஆம் ஆண்டில் செயல்படுத்தப்படுகிறது. ஆதிதிராவிடர் மக்கள், எண்ணெய் நிறுவனங்களின் முகவர்களாக நியமனம் செய்ய விண்ணப்பிக்கும் பொழுதே ‘அ’ மற்றும் ‘ஆ’ வகைபாட்டில் (A & B Category) பெட்ரோல் / டீசல் / எரிவாயு சில்லரை விற்பனை நிலையம் அமைக்க உதவும் வகையில், தேவையான நிலம் வாங்குவதற்கும், வங்கி உத்தரவாதத்திற்குத் தேவையான வைப்புத்தொகைக்காக நிதியுதவி அளிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. முகவர்களாகத் தெரிவு செய்யப்பட்ட பின் இயக்க மூலதனத்திற்காக நிதியுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், எண்ணெய் நிறுவனத்தால் தெரிவு



செய்யப்படும் முன்பும் அல்லது தெரிவு செய்யப்படும் பொழுதும் பயன் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் கீழ் 2014-15 ஆம் ஆண்டு 1 பயனாளி ரூ.7.50 இலட்சம் நிதியுதவி பெற்றுள்ளார்.

### (v) இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

படித்த வேலையற்ற 18 வயது முதல் 35 வயதிற்குட்பட்ட ஆதிதிராவிட இளைஞர்கள் தங்களுக்குத் தெரிந்த / விருப்பமான தொழில் செய்ய நிதி உதவி இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படுகிறது.

2014–15 ஆம் நிதியாண்டில் 1262 இளைஞர்களுக்கு ரூ.5702.09 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### (vi) இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் மருத்துவம் மற்றும் மருத்துவம் சார்ந்த தொழில் அமைப்புகளுக்கான சிறப்பு திட்டம்

இத்திட்டத்தின் கீழ் மருத்துவம் (MBBS), பல் மருத்துவம் (BDS), சித்த மருத்துவம் (BSMS), ஆயுர்வேத மருத்துவம் (BAMS), மற்றும் இயற்கை மருத்துவம் மற்றும் யோகா (BNYS) ஆகிய பட்டம் பெற்றவர்கள், சொந்தமாக மருத்துவ மையம் / ஆய்வகம் / மருந்தகம் அமைப்பதற்கு நிதி உதவி வழங்கப்படுகிறது. 2013–14 ஆம் ஆண்டிலிருந்து

இத்திட்டம் மருத்துவம் சார்ந்த தொழிற்கல்வி பயின்ற முட நீக்கு வல்லுனர், மருந்தாளுநர், கண் கண்ணாடி விற்பவர் மற்றும் ஆய்வகத் தொழில்நுட்ப வல்லுநர் சொந்தமாக மருத்துவம் சார்ந்த தொழில் மையம் / ஆய்வகம் / மருந்தகம் அமைப்பதற்கும், இத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. விண்ணப்பிப்பவர்கள் தகுதி வாய்ந்த ஆணையக்குழுவில் பதிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

இத்திட்டத்தின் கீழ் 2014-15 ஆம் நிதியாண்டில் 15 நபர்களுக்கு ரூ.85.95 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

### (vii) மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கான சுழல் நிதி

ஆதி திராவிடர் மகளிரை மட்டுமே உறுப்பினர்களாகக் கொண்ட குழுக்களுக்கு வறுமை ஒழிப்பு நோக்கோடு சுழல் நிதி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் தர நிர்ணயம் செய்யப்பட்ட ஆதி திராவிடர் மகளிர் குழுக்களுக்கு 2012-13 ஆம் ஆண்டு முதல் ஒரு முறை மானியத் தொகையாக ரூ.25,000/– வழங்கப்படுகிறது. வங்கிகள் ரூ.50,000/– கடனுதவி வழங்குகிறது. இத்தொகை குழுவின் கட்டமைப்பு நிதியினை மேம்படுத்த பயன்படுத்தப்படும்.



இத்திட்டத்தின் கீழ் 2014–15 ஆம் நிதியாண்டில் 2310 நபர்களுக்கு ரூ.120.65 இலட்சம் நிதியுதவி அளிக்கப் பட்டுள்ளது.

### (viii) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கானப் பொருளாதார கடன் உதவித் திட்டம்

இத்திட்டத்தின் கீழ், ஆதிதிராவிடர் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்களது பொருளாதார ஆளுகையை மேம்படுத்த குறைந்த வட்டியுடன் தேவையான நிதியுதவி வருமானம் ஈட்டத்தக்க தொழிலில் முதலீடு செய்ய வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மகளிர் சுய உதவிக் குழுக்கள் தங்களது வருமானம் ஈட்டக்கூடிய தொழிலினை செய்வதற்காக அதிகமான மற்றும் சரியான நேரத்தில், நியாயமான வட்டிக்கும் கடன் வழங்கப்படுகிறது. திட்ட மதிப்பீட்டில் ஒவ்வொரு குழுவிற்கும் 50 விழுக்காடு திட்டத்தொகை அல்லது அதிகபட்சம் ரூ.2.50 இலட்சம் வரை மானியமாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2014–15 ஆம் நிதியாண்டில் 15,135 மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெற ரூ.7453.23 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

அனைத்துத் திட்டங்களிலும் பயன் பெறுபவர்கள் ஆதிதிராவிடர் இனத்தைச் சார்ந்தவர்களாக இருக்க வேண்டும். தாட்கோ மூலம் விடுவிக்கப்படும் மானியம் பின் விடுவிப்பு மானியமாகும்.

மேலும் வருமானம் ஈட்டும் தொழில் / பொருளாதார வளர்ச்சித் தொழில்களுக்கு தாட்கோ மானியம் மற்றும் கடன் வழங்குவதோடு மட்டுமல்லாமல், ஆதி திராவிட இளைஞர்கள் உயர் கல்வியினை கற்கவும் வேறு எந்தத் திட்டங்களிலும் பயன்பெற முடியாத மக்களுக்கு 100 விழுக்காடு மானியம் வழங்கப்படுகின்றது.

### (ix) இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதி உதவி

இந்திய குடிமைப் பணியில் ஆதி திராவிடர்களின் பங்களிப்பினை உயர்த்தும் வண்ணம் இந்திய குடிமைப்பணி முதல் நிலைத் தேர்வில் (Preliminary Examination) தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு 2012-13 ஆம் ஆண்டிலிருந்து ரூ.50,000/– நிதி உதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2014-15 ஆம் ஆண்டில் 47 பேருக்கு ரூ.23.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.



### (x) தமிழ்நாடு தேர்வாணையம் தொகுதி–1 முதன்மைத் தேர்வு எழுதுவதற்கு நிதியுதவி

தமிழ்நாடு தேர்வாணையம் தொகுதி-1 மாநில அளவிலான உயர்ந்த குடிமைப் பணி தேர்வாகும். இந்தத் தேர்வு எழுதும் ஆதி திராவிடர் இளைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு இத்திட்டம் 2013-14 முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு தலா ரூ.50,000/– வீதம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2014-15 ஆம் ஆண்டில் 77 பேர்களுக்கு ரூ.38.50 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### (xi) இளம் சட்டப் பட்டதாரிகளுக்குச் சுயமாக தொழில் செய்வதற்காக நிதியுதவி

தமிழ்நாடு சட்டப் பல்கலைக் கழகம், நிகர் நிலைப் பல்கலைக்கழகம் மற்றும் சட்டப் பல்கலைக் கழகத்தின் அங்கீகாரம் பெற்ற சட்டக் கல்லூரிகளில் பயின்ற, 25 வயது முதல் 45 வயதிற்குட்பட்ட இந்திய பார் கவுன்சில் மற்றும் மாநில பார் கவுன்சிலில் பதிவு பெற்ற சட்டப் பட்டதாரிகள் சுயமாகத் தொழில் துவங்க இத்திட்டத்தின் கீழ் ரூ.50,000/– நிதியுதவி ஒரு முறை வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2014–15 ஆம் ஆண்டில் 483 சட்ட பட்டதாரிகளுக்கு ரூ.241.50 இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

### (xii) பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர்கள் சுயமாகத் தொழில்புரிய நிதி உதவி

பட்டயக் கணக்கர் / செலவுக் கணக்கர்களைச் சுயமாகத் தொழில் செய்வதற்கு ஊக்குவிப்பதற்காக தலா ரூ.50,000/- மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டம், 2013-14 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### (xiii) மேலாண்மை இயக்குநர் விருப்புரிமை நிதி

இத்திட்டம் 2012-13ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டு உடனடியாக நிவாரணம் வழங்குவதற்காக ரூ.100 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மிகவும் நலிந்த நிலையில் உள்ள ஆதி திராவிடர்களுக்கு மருத்துவ சிகிச்சைக்கான நிதியுதவி, ஆரம்ப கல்வி முதல் தொழிற்கல்வி வரை தொடர்வதற்குத் தேவைப்படும் கூடுதல் நிதி உதவிகள், இன கலவரத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி நிவாரணம் மற்றும் தகுதி வாய்ந்தவர்களுக்கு தேவைக்கேற்ற உதவி, நடைமுறை விதிகளுக்குட்பட்டு இத்திட்டத்தின் மூலம் வழங்கப்படுகிறது.



இத்திட்டத்தின் கீழ் 2014–15 ஆம் ஆண்டு 57 பேருக்கு ரூ.7.08 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

### (xiv) மாவட்ட ஆட்சியர் விருப்புரிமை நிதி

மாற்று திறனாளிகள், ஆதரவற்ற விதவைகள், நலிந்த கலைஞர்கள், 40 வயதிற்கு மேல் திருமணம் ஆகாத பெண்கள், பெற்றோர் / பாதுகாவலர் இல்லாத குழந்தைகள் மற்றும் மாவட்ட ஆட்சியாளர்களால் தகுதியானவர்கள் என கண்டறியப்படுபவர்கள், இத்திட்டத்தின் கீழ் முன்னுரிமைப் பெற்று, ஒருவருக்கு ரூ.20,000/– வரை மாவட்ட ஆட்சியர் மூலம் நிதியுதவி வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2014–15 ஆம் நிதியாண்டில் 499 பேர் பயன்பெற ரூ.99.90 இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

## 6. தொழில் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினராக உள்ள ஆதி திராவிடர் மகளிர்களுக்கு நிதியுதவி

மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கேற்ப சமூக நல இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் செயல்படும் தொழில் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள ஆதி திராவிட மகளிர்களுக்கு நவீன

தையல் இயந்திரம் வழங்கிட தையல் இயந்திர விலையில் 30 விழுக்காடு சிறப்பு மைய நிதியுதவியிலிருந்து மானியம், எஞ்சிய 70 விழுக்காடு தாட்கோ பங்கு மூலதனத்திலிருந்து விளிம்புக் கடனாக 4 விழுக்காடு வட்டிக்கு வழங்கப்படுகிறது.

நிதியாண்டு 2014–15 இல் 2834 பயனாளிகளுக்கு ரூ.393.91 இலட்சம் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளது.

## 7. பழங்குடியினருக்காகச் செயல்படுத்தப்படும் திட்டங்கள்

பழங்குடியினருக்கான கீழ்க்கண்ட பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் தாட்கோவால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

1) நிலம் வாங்கும் திட்டம்
2) நில மேம்பாட்டுத் திட்டம்
3) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்
4) பழங்குடி இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம் (வாகனக் கடன்)
5) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி
6) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான பொருளாதார கடன்
7) தொழில் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள பழங்குடியின மகளிர்களுக்கு நிதியுதவி



### (i) நிலம் வாங்கும் திட்டம்

நில உடமை, மகளிரது சமூக நிலையை உயர்த்தும் அளவு கோல் என்பதால் பழங்குடியின மகளிர், இத்திட்டத்தின் கீழ் நிலம் வாங்குவது ஊக்குவிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் அதிகப்பட்ச திட்டத் தொகையான ரூ.7.50 இலட்சத்தில் 50 விழுக்காடு மானியமாக வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் பழங்குடியினர் அல்லாதவர்களிடமிருந்து நிலம் வாங்கப்பட வேண்டும்.

### (ii) நிலம் மேம்பாட்டுத் திட்டம்

பழங்குடியினர் தங்கள் நிலத்தை மேம்படுத்த இத்திட்டத்தின் வாயிலாக சிறு பாசனம், கிணறு வெட்டுதல் மற்றும் மின் மோட்டார் அமைத்து நீர் வளம் மற்றும் நில வளம் மேம்படுத்துவதற்கான கடனுதவி வழங்கப்படுகிறது. அதிகப்பட்ச நிதியுதவியாக ரூ.7.50 இலட்சம் 50 விழுக்காடு மானியத்துடன் வழங்கப்படுகிறது.

### (iii) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

இத்திட்டத்தின் வாயிலாகப் பழங்குடியினர் தங்களது சமூக பொருளாதார நிலையை உயர்த்திக் கொள்ளும் வகையில் வருமானம் ஈட்டக் கூடிய தொழில்களுக்கு கடனுதவி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் குறைந்தபட்ச

திட்டத்தொகை ரூ.1.50 இலட்சம் ஆகும். திட்டத்தொகையில் 50 விழுக்காடு அதிகப்பட்சமாக மானியம் ரூ.3.75 இலட்சம் வரை பின் விடுவிப்பு மானியமாக வழங்கப்படுகிறது.

நிதியாண்டு 2014-15 இல் 488 பயனாளிகள் ரூ.1638.30 இலட்சம் நிதியுதவி பெற்றுள்ளனர்.

### (iv) பழங்குடியின இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தில் ஓட்டுனர் உரிமம் வைத்துள்ள பழங்குடியின இளைஞர்களுக்குப் பயணியர் வாகனம் / ஈப்பு வாங்குவதற்கு திட்டத் தொகையில் 50 விழுக்காடு மானியம் அதிகப்பட்சமாக ரூ.4 இலட்சம் வரை பின் விடுவிப்பு மானியமாக வழங்கப்படுகிறது.

நிதியாண்டு 2014–2015 இல் இத்திட்டத்தின் கீழ் 69 பழங்குடியின இளைஞர்கள் ரூ.446.12 இலட்சம் நிதியுதவி பெற்றுள்ளனர்.

### (v) மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி

இத்திட்டத்தின் கீழ் ரூ.25,000/– மட்டும் ஒரு முறை மானியமாக, சுய உதவிக் குழுக்களின் கட்டமைப்பு நிதியினை மேம்படுத்த வழங்கப்படுகிறது.



இத்திட்டத்தின் கீழ் 2014-2015 ஆம் ஆண்டு 12 பழங்குடியின மகளிர் பயன்பெற ரூ.75,000/- நிதி விடுவிக்கப்பட்டுள்ளது.

### (vi) மகளிர் குழுக்களுக்கான பொருளாதார கடன்

பழங்குடியின மகளிரை மட்டும் உறுப்பினர்களாகக் கொண்ட சுய உதவிக் குழுக்கள், வருமானம் ஈட்டக்கூடிய தொழில்களான கைவினைப் பொருட்கள் செய்தல், தோட்டக்கலை, சுற்றுலாத் தலங்களில் சிற்றுண்டி மற்றும் பிற கடைகள் அமைத்தல், சுற்றுலா மற்றும் உபசரிப்பு சார்ந்த தொழில்கள் செய்ய இத்திட்டத்தின் கீழ் திட்ட மதிப்பீட்டில் 50 விழுக்காடு அல்லது அதிகபட்சமாக ரூ.3.75 இலட்சம் பின் விடுவிப்பு மானியமாக விடுவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2014-2015 ஆம் ஆண்டு 588 பழங்குடியின மகளிர் ரூ.254 இலட்சம் நிதியுதவி பெற்றுள்ளனர்.

### (vii) தொழில் தையல் கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ள பழங்குடியின மகளிர்களுக்கு நிதியுதவி

சமூக நல இயக்குநரகத்தின் கட்டுப்பாட்டிலுள்ள தையல் கூட்டுறவுச் சங்கங்களின் பழங்குடியின மகளிர் உறுப்பினர்களுக்கு நவீன தையல் இயந்திரம் வாங்கிட தையல்

இயந்திர விலையில் 30 விழுக்காடு மானியமாகப் பழங்குடியினருக்கான மைய அரசின் சிறப்பு நிதியுதவி திட்டத்தின் கீழும், எஞ்சிய 70 விழுக்காடு விளிம்பு கடனாக தாட்கோ பங்கு மூலதனத்திலிருந்தும், 4 விழுக்காடு வட்டிக்கு வழங்கப்படுகிறது.

இத்திட்டத்தின் கீழ் 2014-15 ஆம் ஆண்டு 196 பழங்குடியின மகளிர் ரூ.27.24 இலட்சம் நிதியுதவி பெற்றுள்ளனர்.

## 8. திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்

ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ இளைஞர்களுக்குத் தகுதியான வேலை வாய்ப்பினை உருவாக்கிடவும், பணி வாய்ப்பு சந்தைக்கேற்ப தங்கள் திறனை மேம்படுத்திக்கொள்ளும் வகையில், பல்வேறு திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்கள் மூலம் அளிக்கப்படுகின்றன. இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு மற்றும் சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்திட இப்பயிற்சிகள் மத்திய சிறப்பு நிதியுதவி திட்டத்தின் 10 விழுக்காடு நிதியினைக் கொண்டும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிதியின் மூலமும் வழங்கப்படுகின்றன.



### தாட்கோ மூலம் நடத்தப்படும் சில பயிற்சிகள்

- குளிர்சாதன கம்மியர்
- ஆயத்த ஆடை வடிவமைப்புப் பயிற்சி
- அழகு கலைப் பயிற்சி
- பிபிஓ / கால் சென்டர்
- கணினி வடிவமைப்பு (CAD/CAM)
- பொது நுழைவுத் தேர்வுக்கான பயிற்சி (CAT/XAT)
- டீசல் கம்மியர்
- மின் வினைஞர்
- பொருத்துனர்
- உணவு உற்பத்தி மற்றும் உணவு பரிமாறுதல்
- காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி
- வன்பொருள் மற்றும் வலைபின்னல் பயிற்சி
- ஜெ.சி.பி. பொக்லைன், போர்க் லிஃப்ட் (Fork Lift) இயக்கப் பயிற்சி
- இயந்திர கம்மியர்
- பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி
- சில்லறை விற்பனை மேலாண்மை
- மென்பொருள் சோதனை
- சுருக்கெழுத்துப் பயிற்சி
- கணினி மூலம் கணக்குகளை சமன்படுத்துதல் டேல்லி (Tally)
- தையல் கலைப் பயிற்சி

நிதியாண்டு 2014-15 இல் 9,641 இளைஞர்களுக்கு 45 நிறுவனங்கள் மூலம் ரூ.14.16 கோடி மதிப்பீட்டில் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளன.

## 9. கட்டுமானப் பிரிவு

தாட்கோ நிறுவனத்தின் கட்டுமானப் பிரிவு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான பள்ளிக் கட்டடங்கள், பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகள், சமுதாய நலக் கூடங்கள் மற்றும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு அடிப்படை வசதிகள் செய்தல் போன்ற பணிகளை மேற்கொண்டு வருகிறது.

## 10. மாநில அரசுப் பணிகள்

### புதிய விடுதிக் கட்டடங்கள்:–

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணாக்கர்களுக்கான தற்போது உள்ள விடுதிகளுக்கும், அதிகரித்துவரும் விடுதிகளின் தேவைகளுக்கும் உள்ள இடைவெளியினை நீக்கும் பொருட்டு, புதிய விடுதிகள் தோற்றுவிக்கப்பட்டு, வாடகை கட்டடங்களில் இருந்த விடுதிகளுக்கு சொந்த கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 2013-14 ஆம் ஆண்டில், முதற்கட்டமாக வாடகை கட்டடங்களில் இயங்கி வந்த 27 விடுதிகளுக்கு புதிய



கட்டடங்கள் கட்டப்பட்டன. 2015-16 ஆம் ஆண்டில் 27 விடுதிகள் கட்டப்பட உள்ளன.

## 11. நபார்டு திட்டப் பணிகள்

### (அ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவர்களுக்குப் புதிய விடுதி கட்டுதல் (RIDF - XVIII)

நிதியாண்டு 2014-15 இல் ரூ.37.55 கோடி செலவில் 44 புதிய விடுதி கட்டடங்கள் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவற்றில் 32 விடுதி கட்டடங்கள் கட்டி முடிக்கப்பட்டும், 12 கட்டடப்பணிகள் நடைபெற்றும் வருகின்றன.

### (ஆ) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல பள்ளிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் <u>(RIDF - XIX)</u>

நிதியாண்டு 2014-2015 இல் 792 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு அரசு ரூ.52.47 கோடி அனுமதி வழங்கியுள்ளது. 83 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் நடைபெற்று வருகின்றன.

பல்வேறு திட்டங்களின் கீழ் கட்டுமானப் பிரிவு மூலம் ரூ.120.55 கோடி மதிப்பிலான பணிகள் நடைபெற்று வருகின்றன.

## IV. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறைக்கான 2015-2016 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு

(ரூபாய் கோடியில்)

| தொடர் எண். | துறைத் தலைவர்கள் | வருவாய் | மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1 | தலைமைச் செயலகம் | 5.79 | 0.00 | 5.79 |
| 2 | ஆதி திராவிடர் நலத்துறை | 1712.67 | 169.82 | 1882.49 |
| 3 | பழங்குடியினர் நலத்துறை | 186.72 | 31.29 | 218.01 |
| **மொத்தம்** | | **1905.18** | **201.11** | **2106.29** |

**ந. சுப்ரமணியன்**
ஆதி திராவிடர் மற்றும்
பழங்குடியினர் நல அமைச்சர்